தொழில்

இந்த இதழில்

திரு. வி. ஆர். நாகராஜன்	...	2
தலையங்கம் : சேலத்து அலுமினியம்	...	3
வாழ்க அறங்காவலர்கள் !	...	3
அமெரிக்காவில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி	...	5
படம்	...	7
முன்னுக்கு வருபவர்கள்	...	8
தொடர்கதை : இணைந்த உள்ளங்கள்	...	9
கவிதை :		
வாழ்க தொழில்	...	11
தென்றல் மங்கை !	...	18
மண்பாண்டத் தொழிலுக்கு கண்காட்சி தேவை	...	15
ஆசிரியருக்கு கடிதம்: S P I கோட்டா அவசியம் தானா ?	...	17
ஒன்பது போல் வாழ்க !	...	21
மை தீட்டாக் கண்கள்	...	23
ராசிபலன்	...	25
சினிமா : பாட்டாளியின் சபதம்	...	28

MOHAN INDUSTRIES (Regd).

470, T. H. ROAD,

Madras-21.

MOHAN PAPER CUTTING MACHINE FOR HAND DRIVE

This machine is indispensable to Printing Presses and Binding Offices. Designed for narrow strip cutting and supplied with one extra knife. It is very strong and extremely easy to operate.

Size:	24"	Hight of clamp.	5"
"	18"	" " "	3".

TREADLE PERFORATOR

Sizes: 18", 20" and 24".

Highly finished and constructed sturdy, treadle drive fitted with English Pins, Polished wooden table and Guide. Modern arrangements are provided to 24" machine to operate even half length.

LEAD & RULE CUTTER

Sizes. 9½", 14" and 18".

Strong and durable with high class steel blade and tension spring. Easy to cut leads and brass rules clean & accurate.

DIE STAMPING PRESS

Fitted with a heavy type handle and two powerful springs. Hand operation for quick return is the important feature of its kind.

HARD PRESS: Siz: 13"×19", 15×21" and 15×21 (Heavy duty)

This is indispensible to Printing Presses and Binding Offices. Strongly built for modern use.

PLEASE CONSULT US FOR ALL YOUR ABOVE MACHINE PROBLEMS

124851
JL M24, N58T0 N58:1.6



திரு. வி. ஆர். நாகராஜன்

அன்பும், பண்பும் கொண்டவர் படத்தில் காட்சியளிக்கும் பெருமகனார். அண்மையில் மாநில சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக மாநில அரசினரால் நியமிக்கப்பட்டுள்ளார். மிகவும் பொருத்தமான தேர்வு. பொதுவாழ்வில் பணி புரிந்து புகழ் தேடிய இந்த நல்லவரை அரசாங்க வேலைகட்கு ஆள் தெரிந்தெடுக்கும் குழுவின் உறுப்பினராக அரசாங்கம் நியமித்தமை முற்றிலும் சிறப்புடைத்து.

எப்போதும் இன்முகத்துடன் இன்சொல்லால் பிறரைக் கவரும் எழில் படைத்த திரு. நாகராஜன் 1909-ல் பிறந்தவர். திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரியில் படித்து. பி. ஏ. பட்டம் பெற்றவர். சூசையப்பர் கல்லூரி மாணவர் என்றால் அவரது கல்வியின் சிறப்பு, நன்னெறிகள் பற்றிச்சொல்ல வேண்டியதில்லை. பின்பு சட்டக்கல்வி பயின்று பி. எல். பட்டம் பெற்று தமது 29-வது வயதில் வழக்கறிஞரானார். சமூகத்தில் முன்னேற்ற மடையாத வன்னிய குல மாணவர் ஒருவர் தமது 29வது வயதிலேயே வழக்கறிஞரானது அக்காலத்தில் ஒரு புதுமை! தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரத்தில் வழக்கறிஞர் தொழில் புரிந்து பொருளும், புகழும் ஈட்டினார்.

‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்றமாதிரி திரு. நாகராஜன் தம் சிறுவயதிலேயே பொதுநலப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். ‘ஜார்ஜ் காரனேஷன் கிளப்’ என்ற பொதுப்பணி நிலையத்தின் தலைவராக அரும்பணிகள் ஆற்றினார். சில ஆண்டுகளுக்குள் தெ. ஆ. மாவட்டத்தில் திரு. நாகராஜன் அவர்களை அறியாதவர் யாருமில்லை என்று கூறினால் அது மிகையல்ல.

1949-ல் அவர் தென் ஆர்க்காடு மாவட்டக்கழக உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் சிறந்த தொண்டுகள் பல செய்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் சபையில் மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக, இருளகற்றும் கல்வித் துறையிலும் சேவைகள்செய்தார். அரசில் துறை வேறு திரு. நாகராஜன் அவர்களை ‘வருக, வருக’ என்றழைத்தது. நாடு குடியரசான பின்பு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் விழுப்புரம் தொகுதி மக்கள் பெருவாரியான வாக்குகளை அளித்து, திரு. நாகராஜன் அவர்களைத் தமது பிரதிநிதியாகமாநிலச் சட்ட மன்றத்துக்கு அனுப்பி வைத்தனர். சட்ட மன்றத்தில் அவர் ஆற்றிய பெரும் பணிகள் நாடு முழுவதும் தெரியும்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் நாட்டம் கொண்ட திரு. நாகராஜன், சென்னை தொழில்கள் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். டாக்டர் ஜான் மத்தாய் தலைமையில் நியமிக்கப்பெற்ற இந்திய வரிவிதிப்பு ஆராய்ச்சிக் குழுவினர் முன்பு திரு. நாகராஜன் அளித்த சாட்சியம் குறிப்பிடத்தக்கது.

ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை நடததும் திரு. நாகராஜன் அவர்கள் தாராள மனம் படைத்தவர். ஒழுக்கத்துக்கு உறைவிடம். நற்குணங்களுக்கோர் குன்றம்! உள் ஒன்று வைத்துப் புறம்வேறொன்று பேசாதவர். தம் இளமை முதலே சமுதாயத்தில், பிறப்பு காரணமாகத் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் இனங்களை முன்னேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாடு உடையவர் அவர். வெறும் வாய்ப்பேச்சு வீரரல்லர்; செயல் வீரர். சர்வீஷ் கமிஷன் உறுப்பினராக இவர் பணியாற்றும் வரை பின் தங்கிய இனத்தவர்களின் நலன்கள் அவர் கையில் பத்திரமாக இருக்கின்றன என்று துணிந்து கூறலாம். 50வயதுக்கும் குறைவான அவர் நீடூழி காலம் வாழ்ந்து, சிறப்புகளையெல்லாம் பெற “தொழில்” வாழ்த்துகிறது!

———

பட்டு உற்பத்தி

இந்தியாவில் கச்சாப் பட்டு உற்பத்தியில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு வந்திருக்கிறது. 1953-ம் ஆண்டில் கச்சாப்பட்டு உற்பத்தியளவு-24, 61, 759 ராத்தல், 1956-ம் ஆண்டுக்குள் அது 34, 13, 245 ராத்தலாகப் பெருகி விட்டது. 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டுத்தொழில்வளர்ச்சிக்கு ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 15—7—58	இதழ் 6

சேலத்து அலுமினியம்

ஜினீவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் நல மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராகக் கலந்து கொண்ட சென்னை மாநில அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் இரட்டை வெற்றியுடன் திரும்பி வந்துள்ளார். சர்வ தேசத் தொழிலாளர் நல மகா நாட்டில் தம் பணியில் வெற்றி கண்டது மட்டுமின்றி, சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாகவும் ஒரு பயனுள்ள ஏற்பாட்டுக்கு வழி செய்து விட்டு அவர் தாய்நாடு திரும்பியுள்ளதையே நாம் இரட்டை வெற்றி என்று குறிப்பிடுகிறோம்.

அந்நியச் செலாவணி முடை காரணமாகக் கிட்டத்தட்ட கைவிடப்பட்டு விட்ட அலுமினியத் தொழிற்சாலைத் திட்டத்துக்கு புத்துயிர் அளித்த பெருமை திரு. வெங்கட்ராமன் அவர்களையே சாரும். அலிமினியத் தொழிற்சாலை நிறுவுவதில் பிரான்ஸ், இத்தாலி ஆகிய இரு நாடுகளும் இந்தியாவுடன் ஒத்துழைக்கப் பேரார்வம் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்திருக்கிறார். வெறும்வாய்ப்பேச்சுடன் நின்று விடாமல் மாநில, மத்திய அரசாங்கங்களிடம் திட்ட வட்டமாக அவர் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவும் முடிவு செய்துள்ளதை நாம் பாராட்டுகிறோம்.

சேலம் அலுமினியத் தொழிற்சாலையை அரசாங்கத்துறையில் நிறுவுவதா; அல்லது தனியார் துறையில் நிறுவுவதா என்பது பற்றியும் ஒரு சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எந்தத் துறையில் அது ஏற்படுவதாயினும் விரைவில் தொழிற்சாலை உருவாவதையே மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்குமென்பதுடன் தென் நாட்டிலேயே ஒரு தொழில் புரட்சி உருவாக அது உதவியாக அமையும். நெய்வேலி நிலக்கரியும் சேலத்து அலுமினியமும் தமிழ் நாட்டையே ஒரு குபேர நாடாக ஆக்கும் ஆற்றல் படைத்தவை.

நெய்வேலி மின்சாரம் கிடைத்து விட்டால் சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை தோன்றுவதற்குப் பெரிய இடர்ப்பாடுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. (அடுத்த பக்கம்)

வாழ்க அறங் காவலர்கள் !

அறநிலைய அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும், அவர்தம் இல்லத்தரசியாரும் இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கின்றனர். 'வாழ்வாங்கு வாழும்' இப்பெரு மக்களின் நிழல்பட்டு வாழ்வில் உயர்வு அடைந்தோர் எண்ணிலாதார். அமைச்சரின் அறுபதாண்டுநிறைவைச் சிறந்த முறையில் கொண்டாடி மகிழ்வுற்றனர் நன்றி பாராட்டும் நற்பண்பார் தமிழ் மக்கள். மாநில அமைச்சர் குழு அத்தனையிலும் இடம் பெற்ற தனிச் சிறப்பு அறநிலைய அமைச்சர் ஒருவநக்கே உண்டு. விடுதலைப் போராட்டக் காலத்திலும், விடுதலை வந்த பின்பு ஆக்கப் பணியிலும் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆற்றியுள்ள அருமபெரும் நற்றொண்டுகள் சிறப்புடையன. அறநிலைய அமைச்சராக அவர் பதவி ஏற்ற பின்பு, சைவ சமயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆலயங்களில் எல்லாம் நல்லறங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. தமிழ்மொழிக்கும், சிறப்பாக சைவ சமயத்துக்கும் அமைச்சர் அவர்கள் ஆற்றிவரும் திருப்பணிகளைப் போற்றும் முகத்தான் அண்மையில் தருமபுரம் ஆதீனத் தலைவர் அவர்கள் 'அறங்காவலர்' என்ற மறை வாக்கை திரு. பக்தவத்சலனுக்கு சூட்டி அருளினார்கள். அறங்காவலரும், அவர்தம் அரும துணைவியரும் பல்லாண்டு வாழ்ந்து, எல்லாச்சிறப்புக்களையும் எய்த "தொழில்" பெருமகிழ்வுடன் தமிழ் மக்கள் சார்பில் வாழ்த்துகிறது.

ஏற்கனவே பிரெஞ்சுநிபுணர்கள்குழு ஒன்று, சேலம் அலுமினியம் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தி திட்டம் முற்றிலும் காரிய சாத்தியமானதே என்று தெரிவித்துள்ளது. மேற் கொண்டும் ஒத்துழைக்க பிரான்ஸ் தயாராக இருக்கிறது. அவசியமானல் இத்தாலி தேசம் அளிக்கும் உதவியையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சர்க்கார் துறையில் நடைபெறும் தொழில்களில் திறமை குறைவாக இருப்பதுடன், செலவும் அதிகமாவதாகப் பரவலாக ஒரு புகார் இருந்து வருகிறது. எடுத்துக் காட்டாக சென்னை நகரில் சர்க்கார் பஸ் போக்குவரத்து நடத்துவதையே சுட்டிக் காட்டமுடியும். எனவே, சர்க்காரின் தீவிரமான கண்காணிப்பின் கீழ், சர்க்கார் பாதிக்குமேல் பங்குகள் எடுத்துக் கொண்டு, தனியார்களையும் சேர்த்துக் கொண்டு சுயேச்சை அதிகாரம் படைத்த ஒரு தொழில் கார்ப்பரேஷன் மூலம் சேலம் அலுமினியத் தொழிற்சாலையை நிறுவி நடத்தலாம். மேல் நாடுகளில் இவ்வித சுயேச்சை கார்ப்பரேஷன்கள் மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுகின்றன என்பது கண்கூடு.

பிரான்ஸிலும் இத்தாலியிலும் சில அலுமினியத் தொழிற்சாலைகளை நேரில் கண்ட திரு. வெங்கட்ராமன், அந்நாடுகளிலுள்ளதை விடச் சிறப்பான வாய்ப்புகள் சேலத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

திரு. வெங்கட்ராமன் தாக்கல் செய்யஇருக்கும் அறிக்கை மீது உருப்படியான நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டு, 2-வது திட்டக் காலத்துக்குள்ளேயே சேலம் அலுமினியத் தொழிற்சாலை உருவாதற்கு வழி கோலுவது மாநில, மத்திய அரசாங்கங்களின் தலையாய கடமை என்று வற்புறுத்துகிறோம். தாமதமின்றி அலுமினிய ஆலை ஏற்படுவது, தென் நாடு புறக்கணிக்கப்படுவதாக அடிக்கடிக் கேட்கும் கூச்சல்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்கும். திரு. வெங்கட்ராமன் தம் லட்சியத்தில் முழு வெற்றியும் காண "தொழில்" நல்வாழ்த்து கூறுகிறது.

மோட்டார் ஸ்கூட்டரில் உலகம் சுற்றும் கணவன், மனைவி



★

மோட்டார் ஸ்கூட்டரில் உலகஞ் சுற்றும் அமெரிக்க தம்பதிகள் கென்னத் ராஸ், அவரது மனைவி எஸ்டர் ராஸ் இருவரும் டில்லியில் ஜந்தர் மந்தர் முன்பு நிற்கின்றனர்.

★

அமெரிக்காவில் கூட்டுறவுச் சங்கங்களின் பணி

பி. கே. சிவப்பிரகாசம், எம் ஏ.
டைரக்டர் ஆப் பிரஸ் ஸேர்விஸஸ், யுணைட்டெட் ஸ்டேட்ஸ் இன்பர்மேஷன் ஸேர்விஸ், சென்னை

[தான்ய உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்று பலத்த முயற்சிகள் நாடெங்கும் எடுக்கப்படும் இந்த வேளையில், கூட்டுறவுச் சங்கங்களின் அவசியம் உறுதியாக உணரப்படுகிறது. நம் பிரதமரும் இதற்கு அமோக ஆதரவு அளித்து வருகிறார். சமுதாய திட்ட அரங்கில் இச் சங்கங்கள் பலம் பெற்று வருகின்றன. அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது, தாம் நேரில் கண்ட அனுபவத்தை இந்தக் கட்டுரையில் அழகாக வர்ணிக்கிறார் ஆசிரியர். நம் விவசாயிகள் அவசியம் பலமுறை படிக்க வேண்டிய கட்டுரை இது.
ஆ-ர்.]

உலகில் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடையும் விவசாய சமுதாயங்கள் பல. இந்தியாவிலும் ஐந்தாண்டு திட்டங்களின்படி ஏற்பட்டுள்ள சமுதாய நல திட்டங்கள் கூட்டுறவு முறையை அடிப்படையாகக் கொண்டவையே யாகும்.

அமெரிக்காவில்கூட்டுறவு சங்கங்கள் நெடுங்காலமாக இருப்பவை; எனினும் இந்த நூற்றாண்டிலேதான் அவை பெரிதும் பரவிப் பெருகியுள்ளன. அமெரிக்காவிலுள்ள விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் 10,000 ஆகும்; இவை நூற்றாண்டுகளாக உள்ளவை. இவை காலத்துக்கேற்றவாறு பணி செய்து வருவதால் நாட்டின் விவசாயப் பொருளாதாரத் துறையில் நிலைத்துவிட்டன: இவற்றால் அமெரிக்க விவசாயத்துக்கு ஆகும் பயனும் இன்று அதிகம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயி முன்னேறுவதற்கு உதவி செய்துள்ளன. அவை விவசாயிகளிடையே முற்போக்கான முறைகளைப் புகுத்தியுள்ளன. விவசாய உற்பத்திப் பொருள்களைத் தரம் தரமாகப் பிரித்து விற்க வேண்டும் என்று அவை விவசாயிகளைத் தூண்டின. அவை முதன் முதல் கைக்கொண்ட முற்போக்கான முறைகளில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறு செய்ததால் விவசாயின் வருமானமும் பெருகிற்று; வாங்குவோரும் எங்கும் அதை விரும்பினர். உயர்ந்த தரமான பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும் என்ற தூண்டுதலும் ஏற்பட்டது. அரசாங்கவேலை பார்க்கும் ஆராய்ச்சியாளர்களும் மற்றும் தனியார் நிலையங்களில் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளும் ஆராய்ந்து ஆராய்ந்து கண்டு பிடிப்பவைகளை விவசாயி கடைப்பிடித்துப் பயனடைவதற்கும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் உறுதுணையாய் விளங்கின.

விளைபொருள்களை உண்பதற்கேற்றவாறு பக்குவம் செய்து விற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று பலவாகும். விவசாயிகள் இதற்கென்று வேறொரு ஸ்தாபனத்தை நம்பியிருப்பார்களானால், அவர்களுக்குச் செலவு அதிகமாகும். கூட்டுறவுச் சங்கம் அவர்களுடையது; ஆதலால் செலவு சுருக்கம்.

அளவுக்கு மிஞ்சி விளைந்தவற்றை என்ன செய்வது? இவற்றையும் விற்றுக் காசாக்குவதற்கு விவசாயக் கூட்டுறவுச் சங்கம் உதவுகிறது, பல இடங்களில்.

அமெரிக்க விவசாயிகள் தங்கள் விளைபொருள்களில் சுமார் 22 சதவீதத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவே விற்கிறார்கள். இவ்வாறு 1952—53-ல் நடந்த வியாபாரம் 740 கோடி டாலர் பெறுமான முள்ளதாகும். (இத் தகவல் அமெரிக்க விவ

தொழில்
மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

சாய இலாகாவின் விவசாயக் கூட்டுறவுசேவை ஸ்தாபனத்திடமிருந்து கிடைத்ததாகும்).

விவசாயிகள் தங்களுக்கு வேண்டியவற்றைச் சிக்கனமான முறையில் வாங்குவதற்கு கூட்டுறவு முறையில் ஒன்று சேர்கிறார்கள். விவசாயக் கருவிகளையும் மற்றும் பல சாமான்களையும் அவர்கள் தங்களுடைய கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக வாங்குகிறார்கள். இத்தகைய பொருள்களுக்காக அவர்கள் செலவு செய்வதில் ஆறில் ஒன்றுக்கு மேல் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகச் செலவு செய்வதேயாகும். 1952—53-ல் இது 200 கோடி டாலராயிற்று.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்போர் எத்தனை பேர்? 1940—41-ல் 34 லட்சம் பேர் இருந்தனர்; 1952—53ல் 75 லட்சம் பேர் இருந்தனர்.

அமெரிக்காவிலேயே சுமார் 50 லட்சம் விவசாயிகள் தானே உள்ளனர் என்று கேட்கலாம். ஒருவர் பல கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராயிருக்கலாம்; விவசாயி ஒருவர் தமது விளை பொருள்களை விற்றுத் தரும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றிலும், தமக்கு வேண்டிய சாமான்களை வாங்கித் தரும் கூட்டுறவுச் சங்கம் இன்னென்றிலும், பஞ்சு வெட்டுதல், கன்று காலிகளை வேண்டிய இடங்களுக்குக் கொண்டு போதல் முதலிய வேலைகளுக்கு உதவும் வேறு சில கூட்டுறவுச் சங்கங்களில் ஒரே காலத்தில் சேர்ந்திருக்கலாம். அவ்வாறு பல சங்கங்களில் சேர்ந்து இருப்பவர்களும் பலராவர்.

இப்பொழுது விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் வேலையும் பலவாருகப் பெருகியுள்ளது. விவசாயப் பண்டங்களை விற்றுக்கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 58 சதவீதம் தங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய சாமான்களில் ஒன்றிரண்டை வாங்கிக் கொடுக்கவும் முனைந்துள்ளன. அதே போல, வாங்கும் கூட்டுறவுச் சங்கங்களிலும் 20 சதவீதத்துக்கு மேற்பட்டவை தங்கள் விவசாயிகள் விற்கவேண்டிய விளைபொருள்களில் சில வற்றை விற்றுக்கொடுக்கின்றன.

இவ்வாறு ஒரே கூட்டுறவுச் சங்கம் பல வேலைகளைச் செய்வதால், பணமும் அதிகமாக மிச்சமாகும்; பல இடங்களுக்கு அலையும் தொல்லையும் இல்லாமல் போகும் என்று எண்ணியே விவசாயிகள் இன்று தங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பற்பல வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்கின்றனர்.

அமெரிக்காவில் அந்தக் காலத்திலே அறுவடைக் காலத்தில் விவசாயிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தங்கள் வேலைகளைச் செய்வது வழக்கம். அன்றே கூட்டுறவுச் சங்கங்கள் பிறந்தன என்று கூறலாம். நாட்டுப்புறத்திலே ரயிலடி ஓரமாக ஒரு தானியக் களஞ்சியம் என்றும், நாட்டின் தென் பாகத்திலே ஒருசிறிய நகரத்திலே ஒரு பஞ்சாலை என்றும், விவசாயம் பெருத்த மத்திய மேற்குப் பகுதியிலே விவசாயக் கருவிகளை வாங்கத்தக்க ஒரு கூட்டுறவுச் சங்கம் என்றும் நாட்டில் ஆங்காங்கே ஜனநாயக முறையிலே அரும்பிய பற்பல சங்கங்களே இன்று நாடு நெடுகிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேடிகளாகும்.

இவை ஏன் தோன்றின? வாங்குவதற்காவது, விற்பதற்காவது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஒன்று சேர்ந்து முயன்றபோது தான் கூட்டுறவுச் சங்கமும் தோன்றிற்று. இந்தக் கூட்டுறவினுல் விவசாயிகளின் வருமானம் உயர்ந்திருப்பது ஒரு புறம் இருக்கட்டும்; ஊர்முழுதுமே அதனுல் நன்மை யடைவது பல இடங்களில் கண்கூடு.

வியாபார நிலையிலே விவசாயி தாழ்ந்து போகாதபடி தடுத்து நிறுத்துவது கூட்டுறவுச் சங்கமாகும். விவசாயி மொத்தமாக விற்பவனுகவும் சில்லறையாக வாங்குபவனுகவும் நேர்ந்து விடுவதுஉண்டு. இதனுல் விற்பதில் ஆதாயம் குறையும்; வாங்குவதில் செலவு மிகும். இந்தக் குறையைப் போக்குவதற்கு விவசாயிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவார்கள். பெருவாணிபம் நடக்கும் சூழ்நிலையிலே சிறு வாணிப மக்களும் லாபமடையும் வண்ணம் வகை செய்வது கூட்டுறவுச் சங்கமாகும்.

1952—53-ல் அமெரிக்க விவசாயிகளில் ஐவருக்கு மூவர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருந்தனர். இன்று இன்னும் அதிகமான விவசாயிகள் சேர்ந்திருப்பர் என்று தெரிகிறது.. அமெரிக்க விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் அமெரிக்க விவசாயிக்குப் பணி செய்யும் வரை அவை வளர்ந்து கொண்டே இருக்கும்.

—தொழில் இந்தியா,



இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்தியாவும் அமெரிக்காவும் சென்ற வாரம் கையொப்பம் வைத்த கடனுதவி ஒப்பந்தங்களில் ஒன்று மூன்றரைக்கோடி டாலர் வழங்குவது. அதில் இந்தியாவின் சார்பாக நிதிமந்திரி மொரார்ஜி தேசாயும் அமெரிக்காவின் சார்பாக தூதுவர் எல்ஸ்வொர்த் பங்கரும் கையெழுத்திட்டனர். (இடது கோடியில்) அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு மிஷன் டைரக்டர் ஹாவர்ட் ஈ. ஹூஸ்டன்; (வலது கோடியில்) நிதி இலாகா கூட்டுக் காரியதரிசி என். ஸி. குப்தா.

முன்னுக்கு வருபவர்கள்

தி. சம்பூரணம், ப. மகாலட்சுமி

"மூர்த்தி சிறிதாயினும் கீர்த்திபெரிது" என்பது பழமொழி மட்டுமல்ல; உண்மையும் கூட. படத்திலுள்ள இரு சிறுமியரும் வயதில் சிறியவர்களாயினும் ஆடல் கலையில் பெரியவர்கள்! ஆம். பரத நாட்டியக் கலையில் செல்விகள சம்பூரணமும், மகாலட்சுமியும் சிறந்து புகழுடன் விளங்குகிருர்கள். அவர்களது ஆட்டத்தில் துடிதுடிப்பும், சுழற்சியும், பாவமும் சிறந்து பரிமளிக்கின்றன. அலாரிப்பு, ஜதிஸ்வரம், வர்ணம் முதல் தாயே யசோதா, பாட்டுக்கொரு புலவன், குறத்தி, உழவன் நடனங்கள் வரை கிட்டதட்ட 20 நிகழ்ச்சிகள் கொண்ட முழுநேர நடன நிகழ்ச்சியை மிக எளிதாக நடத்துகின்றனர் கலைச் செல்விகள்.

எடுப்பான தோற்றமும், கவர்ச்சிகரமான உடலமைப்பும், மலர் முகமும் களைப்படையாமல் விறுவிறுப்புடன் ஆடும் திறனும் புடைத்தவர்கள். கலைச்செல்விகளின் ஆடல் திறனை கலைவாணர்களும், பெரும் தலைவர்களும் வியந்து பாரார்ட்டி வாழ்த்தியுள்ளனர். அரங்கில் ஏறி, பம்பரம் கோலச் சுழன்ருடும் கலைச்செல்விகளின் நடனங்களை ஒருமுறை கண்டுவிட்டால் பாரத்தவர்கள் மனதில் அவைநெடுங்காலம் நிலைத்துவிடுவதே அவர்கள் ஆட்டத்தின் தனிச்சிறப்பு.

நடனத்துக்கேற்ற வயது, அழகு, கலை ஆர்வம், திறமை ஆகிய பண்புகள் பெற்றுள்ள குமரிகள் சம்பூரணம், மகாலட்சுமிக்கு சிறந்த எதிர்காலம் காத்திருக்கிறது. ஆடல் அரசிகளுக்கு கிடைக்கும் புகழும், சிறப்பும் அவர்களது ஆசிரியர் திரு. முத்து கிருஷ்ணன் அவர்களையே சாரும்.

கலைமன்றங்களும், சங்கீத சபைகளும் கலைச்செல்வியரை அழைத்துக் கண்டு களிப்பார்கள் என நம்புகிறோம். கலை நிகழ்ச்சிகள் இல்லாமல் இந்நாளில் எந்த ஒரு விழாவும் நிறைவு பெறுவதில்லை. நிறைவைக் குறிக்கும் சம்பூரணமும் திருவைக் குறிக்கும் மகாலட்சுமியும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறோம். புது முகங்களை நாடும் சினிமாப்படத் துறையினரும், கலைக் குழுவினரும் நம் கலைச் செல்விகளை அணுகுவார்களாக!

முகவரி:

K. P. பரசுராம் பிள்ளை
72, S. S. கோயில் தெருவு,
பொள்ளாச்சி.

—————

ரயில்வே பென்ஷன் திட்டம்

—————

விருப்பம் தெரிவிக்கும் காலம் நீடிப்பு

ரயில்வே போர்டுக்குப்பலர் விண்ணப்பித்துக் கொண்டதையொட்டி, பென்ஷன் திட்டம் வேண்டுமா அல்லது ஏற்கெனவே இருந்துவருகிற ஓய்வுகால ஏற்பாடுகள் வேண்டுமா என்று ரயில்வேச் சிப்பந்திகள் தங்களுடைய இஷ்டத்தைத் தெரிவிப்பதற்கான கடைசித் தேதியை இவ்வருஷம் 31-ந் தேதி முடிய நீடிப்பதென்று ரயில்வே போர்டு முடிவு செய்திருக்கிறது.

நீடிப்பு அனுமதிக்கப்பட்டிருப்பது இது இரண்டாவது தடவையாகும். கடைசித்தேதியை மேலும் நீடிக்க அனுமதிக்க முடியாது என்று ரயில்வே போர்டு முடிவு செய்திருக்கிறது.

தற்போதைய நீடிப்பு,1948 ஜூன் 30-ந் தேதியன்று அல்லது அதற்கு முன்வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விஷயத்தில் பிரயோகமாகாது. வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் கோரிக்கைகளைப் பைசல் செய்யும் விஷயத்தில் அனாவசிய காலதாமதம் ஏற்படாதிருக்கும்படி பார்த்துக் கொள்வதற்காகவே இந்த ஏற்பாடு.

தொடர் கதை :

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

[செல்வநம்பி (கதாநாயகன்) எஸ். எஸ். எல். ஸி. வரைப் படித்த இளைஞன். மேலும் படிப்பதற்கு அவனுக்கு கொள்ளை ஆசை. ஆனால் அவன் குடும்பம் ஏழை உழவர் குடும்பம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவனது தந்தை ஒரு நாளிரவு எங்கோ போய் விட்டார். வாழ்வில் முன்னேற நாட்டம் கொண்ட செல்வநம்பி ஒரு நாள் நள்ளிரவு யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறான்.

கால்போன போக்கில் நடந்து, ஒரு ஊரை அடைகிறான். படிப்பதற்கு அவ்வூர்ப் பெரும் பணக்காரரின் உதவியை நாடுகிறான். அவர் மறுத்து விரட்டி விடுகிறார். மனமுடைந்த செல்வநம்பி ஏமாற்றுக்காரனாகத் துணிவு கொள்கிறான். வழியில் நின்றிருந்த ஒரு காரில் திருடுகிறான். கிடைத்ததெல்லாம் பத்து ரூபாயும், இருஜோடி மேல்நாட்டு பாணி உடுப்புகளும் தாம். அவ்வழகான உடுப்புக்களை அணிந்து கொண்டு ஒரு உணவு விடுதியில் நுழைகிறான்.

பின்பு நடப்பதென்ன?...இந்த இதழில் படியுங்கள்! ஆ-ர்.]

3. மன்னிப்பு ?

ஓட்டலில் தங்கும் அறைகள் பல அமைந்துள்ளன. 'ஒரு தனி ஆள் அறை தேவை' என்று கேட்டான். அந்த ஓட்டல் காரர் 'ஒரு ஆள் 'ரூம்' எல்லாம் சாவி கொடுத்தாகிவிட்டது. 'இரண்டு ஆள் தங்குதற்குரிய அறையில் தங்க விரும்பினால் சாவி கொடுக்கிறேன்' என்று கூறினார். 'வேறு விடுதிக்காவது செல்லலாம்' என்று எண்ணினான் செல்வ நம்பி. இதற்குள் இன்னொரு தனி ஆளும் வந்து அறை கேட்டான். முடிவில் இரண்டு பேருமாகவும் ஒரு அறையை எடுத்துக்கொண்டனர்.

அன்று இரவு அமைதியாகக் கழிந்தது. அந்த அறைக்கு வந்த நண்பனும் நம் செல்வ நம்பியின் போக்கிற்குச் சாதகமானவன்தான். தந்திரமாகப் பிழைக்கும் பேர்வழி. தந்திரக்காரரை ஏமாற்றுபவன். ஆனால், தயவுக் குணம் உள்ளவன். பத்திரிகையில் வரும் பகுத்தறிவுப் போட்டி ஒன்றினுக்குத் தனக்குத் தெரிந்த விடை எழுதி வைத்துக் கொண்டான். ஒரு 'தனி ஆள்' அறைக்குள் தைரியமாக நுழைந்தான். அங்கிருப்பவரின் பேராசை மனப்பான்மையை அறிந்துகொண்டான். 50 ரூபாய் கொடுத்தால்பகுத்தறிவுப் போட்டி விடையின் ரகசியத்தைச் சொல்லுவதாகக் கூறினான். முடிவு என்ன? 50 ரூபாய் வாங்கி சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு வந்துவிட்டான்.

இந்தப் பேர்வழி தன்னுடன் தங்கியுள்ள செல்வநம்பியை ஏமாற்றவில்லை. ஏமாற்றினாலும் அவனிடம் மிகுந்த பணம் இல்லை. காரணம்: செல்வநம்பியின் முகத்தில் கவலை தோய்ந்த சிந்தனை காட்சியளித்தது. அதனால் அவன் நிலைமையும் கேட்டுத்

தெரிந்துகொண்டான். தான் 'சி. ஐ.டி'க்குப் பயிற்சி பெறுவதையும் கூறினன். செல்வ நம்பி ஒரு முரட்டுத் திருடன்! தென்றல், அதுதான் மற்றவன் பெயர்—ஒரு தந்திரத் திருடன்! இவர்கள் ஒன்று சேர்ந்தால் அடுத்து ஒரு திருட்டு நிகழுமல்லவா!

அடுத்த நாள் காலையில் எழுந்தனர், திட்டமிட்டுக் கொண்டனர். திருட்டுத் திட்டம் தான்! செல்வ நம்பி எங்காவது திருடுவான். நண்பன் சிறிது அவனைத் தப்பு விப்பான். இதுவே அவர்கள் முடிவு.

அன்று இரவு 9-45 மணிக்கு இருவரும் சினிமாத் தியேட்டருக்கு அண்மையில் சென்று கொண்டிருந்தனர். மனிதன் உள்ளம் கள்ளச் செயலில் புகுந்தால் அந்த உள்ளத்தில் இல்லாத ஒரு புது ஆற்ற லும் தோன்றும் போலும்! அங்குமிங்கும் சுற்றிப்பார்க்கும் நோக்கு—அஞ்சாத நிலை யில் செல்லும் தோற்றம்—இடையில் உற்று உற்றுப் பார்க்கும் ஒரு சிறு தந்திரப் பார்வை—இவையெல்லாம் செல்வ நம்பி யிடம் அமைந்திருந்தன. தியேட்டரின் வானெலி, 'வாருங்கள்! வாருங்கள்!' என்று அழைப்பது போல் எதை எதையோ பாடிக் கூவி அழைக்கிறது. திரள்திரளாக மக்கள் செல்லுகின்றனர். சிறிது தூரத்தில் இரண்டு செல்வக் குடும்பத்துச் சிறுமிகள் செல்லுகின்றனர். செல்வநம்பியின் நோக்கு அப்பெண்கள் மீது பாய்ந்தது. ஒரு பெண் ணின் கழுத்தில் அழகான தங்கச் சங்கிலி. தன் கால் சட்டைப்பையில் கூர்மையான எஃகுக் கத்திரி. அருகிலுள்ள நண்பனும் செல்வநம்பியும் ஒருவரை ஒருவர் பார்க்கின் றனர். அவர்களின் கண்களே மனக் கருத்து முடிவுகளை உரையாடிக் கொண்டன. செல்வ நம்பியின் நண்பன் தென்றல் சிறிது பின் தங்கிவிட்டான். பெண்களின் தாய்மார் 'வாடிகண்ணு சீக்கிரம்' என்று சொல்லிக் கொண்டே சீக்கிரமாக அடி வைத்துச் செல்லுகின்றனர். ஒத்த வயதுகள் ஒரு நட் பாகின்றன. இப்படி நிகழும் என்று முன் செல்லும் தாய்மார்களுக்குத் தெரிந்திருந் தால் குறும்பு பேசிவரும் குழந்தைகளையும் உடன் கூட்டிக்கொண்டு சென்றிருப்பர்.

'நல்ல சமயம்'என்று எண்ணிய செல்வ நம்பி கால் சட்டைப்பைக்குள் கையை விட்டான். வாழைப்பழத்தோடு கத்திரியை எடுத்தான். குழந்தைகள் வாய்க்குள் வாழைப் பழத்தைத் திணித்தான். ஒரு பெண்ணின் கழுத்திலுள்ள சங்கிலியை கத்தரித்து எடுத்துக்கொண்டான். வாழைப் பழத்தை உள்ளே விழுங்கிவிட்டுப் பேசு வதா; வெளியே உமிழ்ந்து விட்டுக் குரல் போடுவதா? என்று எண்ணிக்கொண்டிருந்த குழந்தைகள் வாயெடுக்கச் சிறிது நேர, மாயின. 'அம்மா அம்மா' என்று அலறின. சிறிது தூரத்தில் இருந்த செல்வநம்பியின் திடீர் நண்பன், 'உங்களைக் குழந்தைகள் அழைப்பது போலிருக்கு' என்று அத்தாய் மார்களை நோக்கிக் கூறிக்கொண்டே இரண் டடி எடுத்து வைத்தான். தாய்மார்களும் திரும்பிப் பார்க்கின்றனர். குழந்தைகளின் கூக்குரல் அவர்களைத் திடுக்கிடச் செய்தன. 'என்ன? என்ன?' என்று சொல்லிக் கொண்டே வேகமாகச் சென்றனர். 'சங்கிலி! சங்கிலி' என்று வாய் குழறிக்கொண்டே குழந்தைகள் அழுதன. ''களவு போய் விட்டது'' என்று கூவுவதற்கே அவமானம் அவர்களுக்கு. 'வெளியில் சொல்லி அவ மானப் படுகிறதைவிட வீட்டிலே சொல்லி இன்னென்று செய்து கொள்ளலாம்' என்று அம்மா அடக்கினுள்.

சங்கிலிக்குச் சொந்தக் கார அம்மாள் கூச்சல் போடா விட்டாலும், 'போலீஸிடத்தி லாவது சொன்னல் கண்டு பிடிச்சுக் கொடுத்துடுவாங்க' என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்தவரைப் பார்த்து, 'ஐயா! ஐயா! போலீஸை அழையுங்களேன். அதோ போறவனைப் பிடிச்சுட்டு வாங்க ளேன்' என்றூர்கள்.

பக்கத்திலிருப்பவன் இதைச் செய்யவா அங்கிருக்கிறன். 'யாரம்மா! என்ன செய்தி?' என்று செய்தியின் முதல் தொடங்கி முடிவு வரையில் நிதானமாகக் கேட்க ஆரம்பித் தான். இதற்குள் யாரோ இருவர் வந்து செய்தி தெரிந்து கொண்டனர். சிறிது திரும்பித் திரும்பிப் பார்த்து வேகமாய் அடி எடுத்து வைக்கும் செல்வ நம்பியை நோக்கி இரண்டுபேர் விரைவாக ஓடி வருகின்றனர். அவர்களின் பக்கத்திலேயே செல்வ நம்பி யின் நண்பனும் ஓடி வருகின்றனன்.

'ஒருத்தனை விட்டு மற்றொருவனை பிடிச் சுடப்படாது. நிதானமாகச் செய்யணும். யார் அவன்? என்று சிறிது குறுக்கு மடக் கிப் பேசிக்கொண்டு சென்றுன். செல்வநம்பி நீட்டி வைத்த அடியைச் சிறிது ஒட்டமாக்கி னன். பாதையின் பக்கத்தில் பூட்டாத ஒரு சைக்கிள் நிறுத்தப் பட்டிருந்தது. அதையும்

சேர்த்துப் பிடித்துக் கொண்டு சவாரி செய்ய ஆரம்பித்தான். சிறிது நேராக வேகமாகச் சென்று நுழைந்தான் ஒரு சந்திலே. அங்கும் இங்கும் இருந்த ஆட்கள் ஒன்று சேர்ந்து ஓடுகின்றனர். திருடனல்லாதவனை எல்லாம் திருடன் என்று பிடித்துக் கொள்ளுகின்றனர். சைக்கிளில் செல்லுகின்றவரை யெல்லாம் கீழே தள்ளுகின்றனர்.

போலீசும் வந்து விட்டது. செல்வ நம்பியின் நண்பன் போலீஸ் உள்ள இடத்திற்கு வந்து 'இதோ இந்தப் பக்கம் தான் ஓடினான்' என்று உண்மையை மறைத்து வேறொரு வழியைக்காட்டினான். அவ்வழியே சிலரை ஓட்டிவிட்டான். வேறு சில போலீஸார் செல்வ நம்பி சென்ற வழியாகவே ஓடினர்.

இதற்குள் செல்வநம்பி ஒரு வீட்டுத் திண்ணையில் சைக்கிளை வைத்து விட்டு நிதானமாகச் சென்று கொண்டிருந்தான். அவ்வழி வந்த சிலர், செல்வ நம்பிக்கு முன் ஓடினர். சில போலீஸ்காரர்கள் செல்வநம்பியைப்பார்த்து 'சார் இப்படி ஒருதிருடன் ஓடினானா? பார்த்தீர்களா?' என்று அவசர அவசரமாகக் கேட்கின்றனர். செல்வநம்பி, அமைதியானமுறையில் இப்படித்தான் ஒருவன் ஓடினான். என்ன விபரம்?' என்றான். ஒன்றுமே சொல்லாமல் அவ்வழியில் ஓடுகிறார்கள் அவர்கள். இழந்தவர்களும் வீட்டை நோக்கி நகர்ந்து விட்டனர். சைக்கிளுக்குச் சொந்தக்காரனும் சைக்கிளைக் கண்டு பிடித்துக் கொண்டான்.

'என்ன உலகம்? இந்த உலக மேடையிலே அழுக்குத்துணி அணிந்து அல்லல் காட்சி அளிப்பவரெல்லாம் கள்ள நடிகர்கள்! அல்லாதார் உத்தமர்! ஆச்சரியம் இந்த உலகியல்' என்று எண்ணிக் கொண்டே தன் அறைக்குச்சென்றுவிட்டான். சிறிது நேரத்தில் தன் நண்பனும் வந்து விட்டான். 'சரியாக நடித்து விட்டோம்' காரியத்தையும் முடித்து விட்டோம்' என்று சந்தோஷமாகப் பேசி மகிழ்ந்தனர். ஆனால், செல்வநம்பியின் சிந்தனை 'இது நம்முடைய சொந்தப் பிழைப்பல்ல. ஏழைகள் களவு என்னும் படிகளின்மீது ஏறினால் தான் இரக்கமற்ற இந்தச்சமுதாயத்திலே சுக வாழ்வு என்ற கோயிலைக் காண முடியும்' என்ற சிந்தனையில் ஆழ்ந்து அடுத்துச் செய்யவேண்டியதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. நண்பர்கள் இருவரும் பிரிந்து விட்டனர். செல்வ நம்பி அங்கிருந்து புறப்பட்டு விட்டான். அடுத்த ஒரு ஊரில் தங்கச் சங்கிலியை விற்றுத் தாள் நாணயமாக்கிக் கொண்டான். அவன் அன்னையிடம் சொல்லாமல் வந்தது அவனுக்கு அமைதியைத் தரவில்லை. 'கொள்ளைக்கூட்டத்தினர் செய்யும் இக் கொடுந்தொழிலில் கிடைத்த பொருளைக் கொண்டு சென்று தான் அன்னையைக் காண்பதோ? தான் எதற்காக வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தானோ அந்தச் செயலைத் தொடங்கி விட்டுத் தான் வீட்டிற்குச் சென்று அன்னையைக் காணவேண்டும்' என்று முடிவு செய்து கொண்டான். அங்கிருந்து புறப்பட்டு ஒரு L. I. M. மருத்துவக் கல்லூரி முன் வந்து நின்றான்.

'கல்லூரித் திறப்புக் காலமாக இருந்தாலும் கூட மனு எழுதாமல் எப்படிக் கல்லூரியில் சேர்வது? சரி இருக்கட்டும். இடமிருந்தால் இப்பொழுது விண்ணப்பம் எழுதித்தந்து சேரலாமல்லவா!' என்று மனதில் நினைத்துக்கொண்டு கல்லூரிக்குள் நுழைந்தான்.

வாழ்க தொழில்!

("வீரமதி")

—●—

வாழ்க தொழில் வாழ்க தொழில்
வாழ்க தொழில் வாழ்க!

தாழ்வு சூழும் புயலும் வாழ்வில்
தாக்கும் நிலை ஒழிக!

காழ்ப்பு பேதம் கூட்டும் வாதம்
கடுகி எங்கும் அழிக!

பாழும் கொலை பார்க்கும் நிலை
பழிகள் சூது ஒழிக!

கலையும் பொழில் காட்சி யாவும்
கவின் சிறந்து வாழ்க!

மலைகள், சுனை மாநதிகள்
மகிழ்வில் எங்கும் வாழ்க!

அலை கடலும் அணையா ஒளி
ஆகும் குறள் வாழ்க!

தலை சிறந்த தமிழ் மொழியில்
தழைக்கத் "தொழில்" வாழ்க!

'ஆர்ட்ஸ் காலேஜிலேயே இடம் கிடைப்பது அருமையாக உள்ள இக்காலத்திலே இந்தக் கல்லூரியில் எப்படி இடம் கிடைக்கும்? கிடைத்தாலும் பணக்கஷ்டம் வளரும் ......இருக்கட்டும் மழையிலேயே நனைந்து செல்பவனுக்குக் குளிருக்கு மட்டும் கொஞ்சம் கம்பளி ஏன்? பிச்சை எடுத்துப் படிப்பது என்றே துணிந்து வந்த எனக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பிச்சை எடுக்கக் கூச்சம் என்ன? இதை விட்டு, நாட்டு மொழிப்பற்றுக்காகப் புலவர் படித்து வீட்டைக் காக்கப்பணமில்லாமல் வேதனைப் படுவதைக் காட்டிலும், B. A. படித்துத் தொழில் கிடைக்காமல் பணம் இல்லாத பாக்கெட்டில் கைவிட்டுத் திரிவதைக் காட்டிலும் இந்த வைத்தியத்துறை படித்தால் நம்மை நாமே நம்பிப் பிழைக்கலாம்' என்று தனக்குள் எண்ணமிட்டான். உள் வாயிற் படிக்கு முன்புள்ள இடம் நோக்கி அவனது கால்கள் நடைபோட்ட வண்ணமிருந்தன.

பக்கத்திலிருந்த காரைக் கண்டு அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அங்கும் இங்கும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான், யாரும் இல்லை. அவன் திகைப்புக்குக் காரணம் என்ன? அதே எண்ணுடைய காரில்இருந்து தான் அரை மனிதனாக இருந்த தன்னை முழு மனிதனாகக் காட்சியளிக்க வைத்த ஆடைகள் கிடைத்தன. அடிக்கடி தன் சட்டையையும், பையிலுள்ள ஆடைகளையும் காரின் பின் பகுதியையும் பார்க்கிறான்.

செல்வநம்பி யோசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், கல்லூரித் தலைவர் அவன் பின் பக்கத்திலிருந்து வருகிறார். செல்வநம்பியின் ஆடையைப் பார்த்து சிறிது மனமருட்சி கொண்டார். மனத்தை மாற்றிக் கொண்டு புன் சிரிப்பை வரவழைத்த வண்ணம் செல்வநம்பியின் முன் போய் நின்றார்.

செல்வநம்பிக்குத் தூக்கி வாரிப்போட்டது. செல்வநம்பி, எதிரிலுள்ளவரின் ஆடைகளைப்போலவே தன்னுடைய ஆடைகளும் இருப்பதைப் பார்த்து அயர்ந்து விட்டான். டாக்டரும் சிறிது பார்த்துவிட்டு 'தம்பி! நீ யார்?' என்றார். செல்வநம்பி நாத்தடுமாற்றத்துடன் 'நான்......நான் வெளியூர் இந்தக்......கல்லூரியில் சேரலாம் என்று.......வந்தே......ன்' என்றான்.

டாக்டர் 'மிகவும் நல்லது. உள்ளே போகலாம் வா' என்று சொல்லிக்கொண்டே உள் சென்றார். செல்வநம்பியும் தயங்கிய வண்ணம், மெல்ல - அடி வைத்து அவர் பின் சென்றான்.

டாக்டர், அவருக்குரிய இடத்தில் உட்கார்ந்து கொண்டார். 'தம்பி நீ......எது வரையில் படித்திருக்கிறாய்?' என்று கேட்டார். 'நான் S. S. L. C. தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறேன்' என்றான் செல்வநம்பி. டாக்டர் 'நல்லது' என்று கூறிவிட்டு, மீண்டும் 'உன் முகம் ஏதோ ஒரு வாட்டமாக இருக்கிறதே...காரணம் தெரிந்து கொள்ளலாமா, தம்பி' என்றார். செல்வநம்பி சிறிது மௌனம் சாதித்தான். டாக்டர், "நல்லது, தம்பி அகத்தின் உணர்ச்சி முகத்தில் தெரிகிறது. வறுமை உன்னை வதைக்கிறது போலும். பணம் உள்ள இடத்தில் படிக்க முயற்சிப்பதில்லை. படிக்க முயற்சி செய்பவரிடம் பணம் இல்லை. இது உலகத்து இயற்கை இரண்டு வகையாக உள்ளது. ஆனால் மருத்துவத்துறையிலே படிப்பதற்கு நீ உரிய தகுதிபெற்றிருக்கக் வேண்டுமே" என்றார். "நான் எல்லாப்பாடங்களிலும்முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றுள்ளேன்" என்றான் செல்வநம்பி. "அப்படி என்றால் உன்னை நான் கல்லூரியில் சேர்க்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் வறுமை உள்ள இடத்தில் பொறுமை அமைவது கடினம். பொறுமை இல்லாவிட்டால் இந்த மருத்துவத் துறையில் பயிற்சி பெறுவது கடினம். அதற்காகத் தான் கொஞ்சம் தயங்குகிறேன்" என்றார்.

செல்வநம்பி, மிகவும் மகிழ்ச்சியுடன், 'வறுமை' பொறுமையைத் துரத்தினாலும் குறிக்கோளுடன் படிக்க முயலும் நான் பொறுமையைப்பற்றிக் கொண்டு இருப்பேன். தாங்கள் ஊக்கம் கொடுத்தால் வெற்றி பெறுவேன் என்பது நிச்சயம்" என்றான்.

டாக்டர், மகிழ்ந்த முகத்துடன் 'நல்லது உனது படிப்புக்குரிய சான்றுரைகளைக் கொடு' என்றார்.

செல்வநம்பி, வீட்டிற்குச் சென்று கொண்டு வருகிறேன்' என்று சொல்லி இரண்டடி எடுத்து வைத்தான்.

டாக்டர், 'நல்லது தம்பி! உன் பெயர் என்ன?' என்றார்.

"என் பெயர் செல்வநம்பி"

டாக்டர், 'நல்லது செல்வநம்பி சிறிதுநேரம்

இரு, இதோவந்துவிடுகிறேன்' என்றுசொல்லி விட்டு ஒரு அறைக்குள் நுழைந்தார். சிறிது நேரத்திற்குள் வந்தார். செல்வ நம்பி அணிந்து கொண்டுள்ள உடைகளை போலவே ஒரு சட்டையை அவன்முன் நீட்டி, 'செல்வநம்பி! எடுத்துக் கொண்டு செல். உனக்குப் பயன் படும்'' என்று சொல்லியதும் செல்வநம்பி மனங்கலங்கி டாக்டர் காலில் விழுந்து, 'நான் ஆசிரியர் பொருளையே திருடிவிட்டேன், மன்னிக்கவும். இரண்டு நாளுக்கு முன் ஒரு ஊரில் இந்தக் காரைப் பார்த்தேன். எனக்குப் பசியைப் போக்க உணவுக்குப் பணம் கிடைக்கும் என்று காரில் களவு செய்ய முயற்சி செய்தேன். உணவு உண்ணப் பத்து ரூபாயும், மானத்தைக் காக்க இரண்டுஜோடி ஆடைகளும் இருந்தன. எடுத்துக் கொண்டேன். இன்னொரு ஜோடி இதோ இருக்கிறது'' என்று பையுடன் அவர்முன் வைத்து விட்டான். டாக்டர், தன்கையில் உள்ள ஆடைகளையும் பைக்குள்போட்டு, 'நல்லது, செல்வ நம்பி! நான் மகிழ்ச்சியுடன் தருகிறேன் இதைப்பெற்றுக்கொள்; வீடு செல்; சீக்கிரம் வா; சேர்த்துக் கொள்ளுகிறேன்' என்றார்.

செல்வ நம்பி தயக்கமும் மகிழ்ச்சியும் கொண்ட நிலையில் அதை வாங்கிக்கொண்டு வணக்கம் செலுத்தி விட்டு வழி நடக்கிறான். டாக்டர் அங்கேயே நின்று கொண்டு அவனை நோக்குகிறார். அவர் மனம், 'செல்வ நம்பியின் களவுக்குக் காரணம் அவனா? அவன்சூழ்நிலையா?' என்றொரு கேள்வி போட்டது.

(தொடரும்)

* * *

இந்தியாவில் பிரதான ஏற்றுமதிச் சரக்காக இருந்துவந்த ரப்பர் இப்போது உள்நாட்டிலேயே உபயோகிக்கப்பட்டு வருகிறது. 1957-ம் உபயோகிக்கப்பட்ட இயற்கை ரப்பரின் அளவு 51,500 டன்னாகும். தேவையில் ஒரு பகுதியை இறக்குமதி மூலம் பூர்த்திசெய்யவேண்டியிருக்கிறது.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. . 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor
(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.



★

Please Contact us for
Collapsible Gates,
Main Gates,
Window Grills,
Ventilators and all other
Building materials.

★

Steel Trusses and erection works undertaken.


COLLAPSIBLE GATE

Specialist in Arc and Gas welding.

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.


MAIN GATE

Our motto is to satisfy our customers

மண்பாண்டத் தொழிலுக்கு கண்காட்சி தேவை

—அரசன்—

நம் நாட்டில் எண்ணற்ற தொழில்கள் செய்யப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான ஏழைமக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில்கள் குடிசைத் தொழில்களாகும். கூடை, முறம் முதலியன பின்னல், சாயம் போடுதல் மண்பாண்டங்கள் வனைதல், பொம்மைகள் செய்தல் போன்ற தொழில்கள் மக்களுடைய மனதைக் கவர்வனவாக இருப்பினும் இவற்றிற்கும் போதிய ஆக்கமோ ஊக்கமோ அளிக்கப்படுவதாகக் காணோம். இத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் எண்ணிக்கையில் சிறுபாண்மையினரேனும், தொழில் முன்னேற்றம் இல்லையெனில் வாழ்க்கையில் உயர இவர்களுக்கு வழியேது? குறிப்பாக மண்பாண்டத் தொழில் செய்கிற மக்களுடைய தொழிலை நாம் எடுத்துக்கொள்ளுவோமேயானால் இவர்களுடைய மூதாதையர்கள் எவ்வாறு தொழில் செய்து வந்தார்களோ, அதேபோல இன்றுள்ள மண்பாண்டத்தொழிலாளர்களும் தங்கள் தொழிலைச் செய்கிறார்களேயன்றி, முன்னேற்றம் ஏதுங்காணோம். காரணம் இவர்கள் தங்கள் தொழிலை வளர்ச்சிபெறச் செய்வதில் எத்தகைய கவலையும் கொள்ளாதிருப்பதே; அத்துடன் அரசினரும் இதுபோன்று சிறு தொழில்களில் ஊக்கமும், உற்சாகமும் அளிக்காதிருப்பதேயாகும். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்க்கைக் குரிய ஊதியத்தைத் தேடுவதற்கே திண்டாடிக் கொண்டிருக்கும்போது இவர்கள் எங்கிருந்து இத்தொழிலை முன்னேற்றமான முறையில், எவ்வாறு செய்வது என்று சிந்திக்கப்போகிறார்கள்? எனவே, இத்தொழிலை பாட்டன் எவ்வாறு செய்துகொண்டிருந்தானோ அதே நிலையில் பேரனும் செய்துக்கொண்டிருக்கிறான். இத்தொழிலை முன்னேற்றவும், இத்தொழில் செய்யும் முறையை மாற்றியமைக்கவும், நவீனமான பாண்டங்களை வனைதற்குக் கையாள வேண்டிய முறைகளை ஆராயவும் நாட்டு மக்களிடையே இப்பாண்டங்களின் உபயோகத்தைப் பரப்பவும், இப்பாண்டங்களுக்கு நல்ல வளர்ச்சியுள்ள மார்க்கெட் பிடிக்கவும் என்ன வழிவகைகள் என்பதை நாம் ஆராயாமல் இருக்க முடியாது. இவ்வழி வகைகளில் தலையாயது இத்தொழிலுக்கென ஒரு தனிக்கண்காட்சிதேவையென்பதேயாகும்.

கண்காட்சியின் மூலமாகத்தான் தொழில்கள் வளர முடியும் என்பதை அடிக்கடி நாட்டில் பல பாகங்களிலும் பலதிறப்பட்ட கண்காட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதிலிருந்தே உணர முடியும். இன்று நடைபெறுகின்ற கண்காட்சிகள் முழுக்க முழுக்க கடைக் காட்சிகளாக இல்லாமல் ஓரளவிற்கு கண்காட்சிக்குரிய பகுதிகளும் இடம் பெறுகின்றன. எனினும், சில தொழில்களுக்கென்றே தனிக்கண்காட்சிகள் நடைபெறுவதை நாம் கண்டிருக்கிறோம். ஒரு தொழிலுக்கு ஒரு கண்காட்சி என்ற முறையில் நடத்தப்படுகின்ற கண்காட்சிகள் தாம் மக்களைக் கவர்வனவாகவும், மக்கள் நல்லறிவு பெறுதற்கான கல்லூரிகளாகவும் காட்சியளிக்கின்றன. உதாரணமாக, கைத்தறிக் கண்காட்சி என்று சொன்னால் கைத்தறித்தொழில் சம்பந்தமாக ஆதியோடந்தமாக அத்தொழில்பற்றி அறிவுபெறுவதற்கான வாய்ப்பு அடங்கி கிடைக்கின்றது. இது போன்று, பல தொழில்களுக்கும் தனித்தனியாகக்கண்காட்சிகள் பலவிடங்களில் நடைபெறுகின்றன. இவ்வற்றிற்கு மக்கள் பெருவாரியாகச் செல்வதுடன் அத்தொழிலும் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. அரசினரும் ஆவன உதவி புரிகின்றனர். இவர்கள் அளிக்கின்ற ஊக்கம் காரணமாக இத்தொழில் மேன்மேலும் வளர வாய்ப்பிருக்கின்றது. இதுபோன்ற பல தொழில்களுக்கு கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதற்கு அரசாங்கமும் உதவுகின்றது. ஆனால் இந்த மண்பாண்டத் தொழிலுக்கு எனத்தனிகண்காட்சி இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. வட இந்தியாவில் இரண்டொரு இடங்கள் தவிர தென்னிந்தியப்பகுதிகளில் இத்தகைய கண்காட்சி மிக மிக அற்பம்.

வெளிநாடுகளில் இத்தொழிலில் முன்னணியில்

நிற்பது சீன தேசமாகும். இவர்கள் செய்கின்ற மண் பாண்டங்களுக்கு இணையான பாண்டங்கள் வேறு எந்நாட்டவராலும் செய்ய முடியவில்லை என்பது முற்றும் உண்மையாகும்.

இந் நாட்டில் இத்தொழில் செழித்தோங்க வேண்டுமானல் முதன் முதலாக இதற்கென ஒருதனிக் கண்காட்சி ஏற்படுத்தல் வேண்டும். இக்காட்சி சென்னையில் நடைபெற வேண்டும். இதற்கு சென்னை மாநில சர்க்கார் எல்லா உதவிகளையும் அளித்து இக் காட்சியின் வெற்றிக்குஉதவி வேண்டும். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் செய்யப்படுகின்ற மண்பாண்டங்கள் காட்சியில் இடம் பெறச் செய்தல் வேண்டும். இம் முயற்சியில் சென்னை மண் பாண்டத் தொழில் சங்கத்தினர் அரசினருக்கு உதவியாக இருப்பர் என்பது திண்ணம். இப்படி ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுமானல்—இந்திய மத்திய சர்க்காரும் சென்னை மாநில சர்க்காரும் ஒருப்பட்டு ஒரு காட்சியை-மண்பாண்ட கண்காட்சியை இச்சமயம் நடத்த முயல்வார்களானல், இன்னும் பத்தாண்டுக் காலத்தில் இத்தொழில் முன்னேற்றமடையும். உலக நாடுகளைக் காட்டிலும் சிறந்த முறையில் நல்பாண்டங்களைச் செய்து பிறநாடுகளுக்கு அனுப்பமுடியும். இத்தொழில் சம்பந்தமான நுணுக்கப் பயிற்சியும் வளர்ந்தோங்கும். இத்தொழிலுக்குக் காரண கருவியாகஉள்ள மண் சம்பந்தமானஆராய்ச்சியும் வளர்ச்சி பெறும். இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களும் தொழில் அறிவு பெறுவதுடன் வாழ்க்கையில் உயர்வர். எனவே, இது குறித்து மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும், கவனம் செலுத்தி விரைவில் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். மேலும் இப்பிரச்னையை தொழில் கண்ணேட்டத்துடன் அணுக வேண்டும். எல்லாத் தொழில்களும் வளர்ந்தோங்கினல் தான் நாடும் நாட்டு மக்களும் வளர்ச்சியுற முடியும்.

———

இந்தோனேஷியாவுக்கு இந்தியப் புத்தகங்கள் அன்பளிப்பு.

இந்தியா சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றிய 400 புத்தகங்கள் இந்திய சர்க்கார் சாரபில், ஜோக்ஜகர்த்தாவில் உள்ள கட்ஜ மட சர்வ கலாசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப் பட்டிருக்கின்றன. அவைகளில், ஜீவிய சரித்திரங்களும்; தத்துவம், கலை, சரித்திரம், மதம், அரசியல் ஆகியவை பற்றிய நூல்களும் அடங்கியுள்ளன.

Phone : 2438 Grams : MARIGOLD

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர்உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

ஆசிரியருக்கு கடிதம் :

S P I கோட்டா அவசியம்தானா?

ஐயா,

சென்னை ராஜ்யத்தில் இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட (Approved) பேப்ரி கேட்டர் (Fabricators) களுக்கு, ஒவ்வொரு குவார்ட்டருக்கும் (3 மாதகாலம்) வழங்கும் 'அலாட்மெண்ட்' பங்கீட்டை சிறிதளவு கூட உயர்த்தாமல் இருந்தால் சிறு வருவாயைக்கொண்டு பெரிய குடும்பத்தை நடத்துவது மிகவும் கடினமென்று மாநில சர்க்கார் அதிகாரிகளுக்கு நன்ருகத் தெரியும்.

சென்னை சர்க்கார் சிறு சிறு பட்டறைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு வேலை செய்து வருவதை நாங்கள் பாராட்டுகின்ருேம்.

இடையிலே புதிதாக வந்த SPI நபர்களுக்கு மாத்திரம் ஒவ்வொரு குவாட்டருக்கும் குறைந்தது 40 முதல் 80 டன் வரை கோட்டா இருப்பது நியாயந்தானு? அதே சமயத்தில் அங்கீகரிக்கப்பட்ட பேப்ரிகேட்டர்களுக்கு ஒரு டன் முதல் 10 டன் வரைமட்டும் 'கோட்டா' கொடுப்பது நியாயமா?

சென்னை சர்க்கார் நேரடியாகவோ அல்லது மத்திய சர்க்காரைக் கலந்தோ இரும்பு, எஃகு பேப்ரிகேட்டர்களின் அடிப்படையிலே சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கும் இரும்பு, எஃகு அலாட்மெண்டில் பாகுபாடு ஏதுமில்லாமல் ஒரே விகிதத்தில் பகிர்ந்து எல்லோருக்கும் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் படி அதிகாரிகளைக் கோருகின்ருேம்.

சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஒதுக்கும் இரும்பு, எஃகு அலாட்மெண்டை மொத்த உற்பத்தியாளர்கள் (consumer goods), பேப்ரிகேட்டர்கள், விவசாய சாமான்கள் உற்பத்தியாளர்கள், குடிசைத்தொழில் செய்பவர்கள், சிறு தொழில் செய்பவர்கள், இரும்பு, எஃகு தொழில் செய்பவர்கள் (Steel Processing Industries) போன்ற பல பிரிவுகளாகப் பிரித்துக்கொடுத்து வருகிருர்கள். இதனுல் தான் பற்ருக்குறையும் ஏற்படுகின்றது. A,B,C, என்ற மூன்றே தலைப்பின்கீழாக (கோட்டா) பிரித்து கொடுத்தால்தான் ஓரளவு பாரபட்சமில்லாமல் பங்கீடு கொடுத்ததாகக் கருத முடியும்; பற்ருக்குறையையும் ஒருவாறு சமாளிக்க முடியும்.

சாதாரணமாக, ஒரு சில பேப்ரிகேட்டர்களுக்கு (அங்கீகரிக்கப்பட்டவர்கள் மற்றும் அங்கீகாரமில்லாதவர்கள்) ஒரு டன் அல்லது இரண்டு டன் 'Adhoc' பங்கீடு அல்லது casual அலாட்மெண்ட் கொடுத்தும் அதிகாரிகள் சரக்கு இல்லையென்று சொல்லி விடுகின்ருர்கள். ஆனுல் SPI உள்ளவர்களுக்கு 'கோட்டா' அலாட்மெண்ட் குறைவில்லாமல் கொடுத்து வருகிருர்கள்.

ஒரு பக்கத்தில் SPI நபர்களுக்கு பிரத்தியேகமான பங்கீடும், அங்கீகரிக்கப்பட்ட பேப்ரிகேட்டர்களுக்கு சொற்ப பங்கீடும், குடிசைத்தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு மிகக் குறைவான பங்கீடும் கொடுக்கின்ருர்கள். இம்மாதிரியான அலாட்மெண்ட் பாகுபாடு இருந்தால், தொழில் எப்படி நிரந்தரமாக செய்து வாழ முடியும் அல்லது தொழிலை வளர்க்க முடியும்? ஆகவே, சென்னை சர்க்கார் இரும்பு, எஃகு பங்கீடு முறையில் எந்தவிதப் பாகுபாடுமில்லாமல்; உண்மையிலேயே தொழில் செய்யும் அங்கீகரிக்கப்பட்ட பேப்ரிகேட்டர்களுக்கு உடனடியாக 'கோட்டா'வை உயர்த்தி, தேவையான அளவுக்கு 'பர்மிட்'டை வழங்கும்படி கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

சென்னை,
13—7'58.

இப்படிக்கு,
'நியாயவாதி'

தென்றல் மங்கை!

— த. சிகாமணி, பு. பெ. தேவன் —

★

1. மலையோடு விளையாடும் புள்ளி மானோ?
மலரோடு சதுராடும் வண்டு தானோ?
அலையோடு நடமாடும் முத்தோ! சோலை
அழகோடு உறவாடும் ரதியோ? அன்றி
கலையோடு பண்பாடும் குயிலோ? காலை
கார்கண்டு களித்தாடும் மயிலோ? இல்லை!
இலையோடு அசைந்தாடும் தென்றல் மாலை
இளைப்போடு இருந்தளனை நோக்கி வந்தாள்

* * * *

2. கடுங்கோடை இடும்சாபக் களைப்பும், கானல்
நடுநின்று உழைத்த களைப்பும் வேலை
கடும்பசி கொடுத்த களைப்பும் காலை
கதிர்கண்டு விரைந்தோடும் பனிப்போல் தென்றல்
விடுவிடென்று எனைநோக்கி வரவே, சோர்வு
விர்ரென்று எனைத்துறந்து ஓட; கண்ணில்
படுமளவு தோற்றமில்லாத் தென்றல் மங்கை
பண்பாடி சதுராடி இன்பந் தந்தாள்.

* * * *

3. மதன்கண்டு அலருமலர் மணத்தை அள்ளி
மகிழ்வோடு எனைமயக்கத் தந்தாள்; சாலை
அதனருகே இருந்தத் தீம் பலாவைக் கொண்டு
ஆருக்கும் தெரியாமல் எனக்கு யீந்தாள்.
அதன்சுளையைச் சுவைக்கநான் விரும்புங் காலை
"அத்தானே! இதுவென்ன நியாயம்? நங்கைப்
பதமாக நானிருக்கும் போது நீங்கள்
சதமாகப் பழத்தைத் தின்கின்றீர்?" என்றாள்!

விற்பனை வரி: ராஜ்ய இரும்பு, எஃகு சாமான் தயாரிப்போர் சங்கத்தின் கோரிக்கைகள்

[பொது விற்பனை வரி மசோதாவைப் பரிசீலிக்கும் கமிட்டியிடம் சென்னை ராஜ்ய இரும்பு - எஃகு பேப்ரிக்கேட்டர்கள் சங்கம் சமர்ப்பித்த விண்ணப்பம்.]

—·—✻——

சென்ற 19—3—58வ ஷை மசோதா பற்றி, எங்கள் சங்கச் சார்பில் தங்கள் சமூகம் சமர்ப்பித்த விண்ணப்பத்தில், ஷை மசோதாவின் முதல் ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டு, நம் ராஜ்யத்திலுள்ள முதல்விற்பனையாளர்களுக்கு மட்டும் ஒருமுனை விற்பனைவரி விதிக்கப்படவிருக்கும் பொருள்களின் அட்டவணையில் 24-வது ஐட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் 'விவசாயக் கருவிகள் நீங்கலாகவுள்ள இரும்பு எஃகு பொருள்களை, சிறு குடிசைத்தொழில் முறையில் தயாரிக்கும் எங்களுக்கு

ஷை மசோதாவின் 3, (2) பிரிவின்படி விற்பனைவரி விதிக்கப்படும் வரம்பு இல்லாமலும் 17.2 (i) பிரிவின்படி ரிஜிஸ்ட்ரேஷனுக்குரிய வருட விற்பனை வரம்பு இல்லாமலும், 3 சதவிகித ஒருமுனை விற்பனைவரி விதிக்கப்பட்டால், பல்லாயிரம் மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஷை சிறு குடிசைத் தொழில் சிதைந்தொழிந்து, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட இலட்சியங்களில் பிரதானமான, வேலைவாய்ப்பை விஸ்தரிக்கும் திட்டம் குலைந்து, வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவில் பெருகும். ஆகவே, தம் வருவாயை மேன்மேலும் பெருக்க, இயந்திரங்களைப் பயன்படுத்தி, பெரும் அளவில் பொருள் தயாரிப்பவர்களையும், ஜீவனோபாயத்திற்காகவே, ஷை தொழிலில் பாரம்பரியமாக ஈடுபட்டு, சிறு குடிசைத் தொழில் முறையில், சிறிய பட்டறைகள் மூலம் இரும்பு எஃகுப் பொருள்களை தயாரித்து விற்பனை செய்யும் எங்களையும் சமமாகப் பாவித்து விற்பனை வரி விதிக்க முற்படும் ஷை பிரிவுகளை நீக்கி, சிறு குடிசைத் தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்கும் முறையில், ஷைஒருமுனை விற்பனை வரி விதிப்பு முறையிலும்,

விற்பனைவரிவிதிக்கப்படும் வரம்பு ரூ 25,000 என்றும் ரிஜிஸ்ட்ரேஷனுக்குரியவருட விற்பனை ரூ. 10,000என்றும் இரு வரம்புகள் நிர்ணயிக்கக் கோரியிருந்தோம்.

ஆனால், இன்றையவிற்பனை வரிமுறையை முழுவதும் தீர்க்கமாகப் பரிசீலிக்க Dr. P. S. லோகநாதன் அவர்கள் தமது ரிப்போர்ட்டில் "வரிவிதிக்கப்படும் வரம்பு இல்லாத ஒருமுனை விற்பனைவரி முறை அமுலாக்கப்பட்டால், சிறு உற்பத்தியாளர்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்" என்ற உண்மை நிலையை, தெளிவாக ஒப்புக்கொண்ட போதிலும், ஷை வரிமுறை, வரி ஏய்ப்புக்கு இடமில்லாமல் சிறந்த முறையில் இயங்கவேண்டுமெனில் மேற்கண்ட சலுகைகள், வரம்புகள் அறவேகூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே, எங்களில் பலர் இரும்பு-எஃகு பொருள்களுடன், விவசாயக் கருவிகளையும் தயாரிப்பதாலும் இவைகளுக்கு தனித்தனியே கணக்கு வைத்துக்கொள்ளவும், ஒரு முனை விற்பனைவரி விதிக்கப்படும் பொருள்களுக்கு அதிக விவரங்களுடன் கூடிய கணக்குகள் வைத்துக்கொள்ளவும், எங்களது வருமானம் இடமளிக்காததாலும், ஷை இரும்பு எஃகு பொருள்களை ஷை மசோதாவின் முதல் ஷெட்யூலினின்றும் நீக்கி, பலமுனை விற்பனைவரி முறையில் சேர்த்து விடுமாறுகோருகிறோம்.

வருட விற்பனை ரூ.10000-க்குமேல் ரூ. 25000-க்கு உட்பட்ட வர்த்தகர்கள், விற்பனை வரி செலுத்தும் மொத்தவர்த்தகர்களின் எண்ணிக்கையில், ஏறக்குறைய 58 சத விகிதம் இருந்த போதிலும், அவர்களிடமிருந்து வசூலாகும் வரித்தொகை, மொத்த வசூலில் ஏறக்குறைய 8 சதவிகிதமே இருப்பதால், பலமுனை விற்பனைவரி விதிக்கப்படும் வரம்பை, இன்றைய விலைவாசிப்புள்ளியையொட்டி ரூ. 40,000-க்கு உயர்த்தாவிட்டாலும், குறைந்தபட்சம் ரூ. 25,000-க்கு உயர்த்தி நிர்ணயித்தால், இன்றைய விற்பனைவரி நிர்வாக முறையினால் மிகவும் அல்லற்படும் பெரும்பான்மையினரான சிறுவர்த்தகர்கள், சிறு உற்பத்தியாளர்களின், நெடுநாள் துன்பம் கணிசமாகக் குறையும். அதே சமயத்தில் நிர்வாகச் செலவு கணிசமாக

குறைவதால், விற்பனை வரி மூலம் சர்க்காருக்குக் கிடைக்கும் நிகர வருமானம் குறையாது. ஆகவே பலமுனை விற்பனைவரி முறையிலுள்ள விற்பனை வரி விதிக்கப்படும் வரம்பை ரூ. 25000-க்கும், அதையொட்டி ரிஜிஸ்ட்ரேஷனுக்குரிய வருட விற்பனையை ரூ. 20,000-க்கும் உயர்த்தி நிர்ணயித்து சிறுதொழிலும் சிறு வர்த்தகமும் செழித்து வளர்வதற்கு தாங்கள் உதவி செய்யக் கோருகிறோம்.

மேற்கண்ட முறையில் தற்போது நிவாரணம் அளிக்க சாத்யமில்லாவிடில், தற்காலிகமாக Dr. P. S. லோகநாதன் அவர்கள் தம் ரிப்போர்ட்டில் குறிப்பிட்டுள்ளபடி,

1. விற்பனைவரி விதிக்கப்படும் வரம்பு ரூ, 10,000.

2. ரிஜிஸ்ட்ரேஷனுக்குரிய வருட விற்பனை ரூ. 7500.

3. விற்பனை வரி ஒரு சதவிகிதம்.

4. சிறு வர்த்தகர்களுக்கு சலுகையளிக்கும் முறையில் Flat compounded rate ஆக வருட விற்பனை [அ] ரூ. 10,000-க்குமேல் ரூ. 15,000-க்கு உட்பட்டவர்கள் ரூ.5.[ஆ] ரூ. 15,000,க்குமேல் ரூ. 20,000-க்கு உட்பட்டவர்கள் ரூ. 8- [இ] ரூ. 20,000-க்கு மேல் ரூ. 25,000-க்கு உட்பட்டவர்கள் ரூ. 12-விகிதம் பிரதி மாதம் செலுத்தும் முறை.

5. ஷை வர்த்தகர்கள் தம் கொள்முதலுக்கு மட்டும் வவுச்சர்களுடன் கூடிய கணக்கு வைத்திருந்தால் போதும் என்ற சிபார்சுகளை அப்படியே ஒரு வருஷம் அமுலாக்கி, விற்பனை வரி மூலம் தற்போது வரும் நிகர வருமானத்தை விட, புதிய முறையின்மூலம் வரும் நிகர வருமானம் ஓரளவு அதிகரித்தால்,

பலமுனை விற்பனைவரி விதிக்கப்படும் வரம்பை ரூ. 25,000-க்கும், அதையொட்டி ரிஜிஸ்ட்ரேஷனுக்குரிய வருட விற்பனையை ரூ. 20,000-க்கும் உயர்த்தி நிர்ணயிக்க ஆவன செய்து, எங்கள் சிறுகுடிசைத் தொழில் விற்பனைவரி விதிப்பினின்றும் நிவாரணம்பெற, ஷை மசோதாவில் வகை செய்யுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

கோழி, வாத்து வளர்ப்பு 6, 000 பேருக்கு பயிற்சி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 1,500 பேர் முதல் 6,000 பேர் வரை விவசாயிகளுக்குக் கோழி, வாத்து வகைகள் வளர்ப்பதில் பயிற்சியளிப்பதற்கான திட்டமொன்றை இந்திய சர்க்கார் தயாரித்திருக்கிறார்கள்.

கோழி, வாத்து வகைகளை வளர்த்தல், பராமரிக்கும் வேலையைச் சாதாரணமாக சமூகத்தில் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய பிரிவினரே மேற்கொண்டு வருவதால், பயிற்சி முடிந்ததும் அவர்களுக்குத் தொழில் நுட்ப உதவி, போதிய நிதி உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பொருட்காட்சிச்சாலை சிப்பந்திகளுக்கு பயிற்சி

பொருட்காட்சிசாலைகளை திறமையாகவும் நவீன ரீதியிலும் நடத்தி வருவதற்குதேவையான சிப்பந்திகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு, இந்திய சர்க்கார், பம்பாயில் உள்ள வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சிசாலையிலும், டேராடூனில் உள்ள புதைபொருள் ஆய்வுக்கூடத்திலுமாக இரு பயிற்சி நிலயங்களை ஏற்படுத்த முடிவு செய்துள்ளனர். அவைகளில், முந்திய நிலயத்திலே, சேவையின் போதே பயிற்சி பெறுகிற காப்பாளர்கள், உதவி காப்பாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கப்படும். இரண்டாவது நிலயத்தில், பொருட்காட்சிச் சாலையிலுள்ள காட்சிப் பொருள்களை பத்திரமாகப் பாதுகாப்பதில் பயிற்சி அளிக்கப்படும்.

பம்பாய் வேல்ஸ் இளவரசர் பொருட்காட்சி சாலையில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புக்கு 10 பேரையும், டேராடூனில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புக்கு 12 பேரையும் இவ்வாண்டில் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

* * *

1957-ல் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட கச்சா ரப்பரின் அளவு :4, 000 டன்; 1956-ல் உற்பத்தி 23, 444 டன்.

ஒன்பது போல் வாழ்க!

[ஜே. ஸ்ரீதரன்]

மணவான்குடி என்ற கிராமத்தில் மணியன் என்றசிறுவன் இருந்தான். அவன் மிகவும் கெட்டிக்காரன். அவன் அக்கிராமத்தில் தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டான். அங்குமேல் படிப்புக்கு வசதி இல்லை. ஆகையால் அவன் பக்கத்திலுள்ள நகரத்திற்குப் படிக்கச் சென்றான். போகும்பொழுது எல்லா ஆசிரியர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு, கடைசியில் கணக்கு ஆசிரியரிடம் வந்தான். அவருக்கு மணியன்மேல் அன்பு அதிகம். அவர் அவனை "ஒன்பது போல் வாழ்க", 'எட்டுப் போல் வாழாதே" என்று ஆசிர்வதித்தார்.

மணியனுக்கு அதன்பொருள் விளங்கவில்லை.

ஆசிரியர் விளக்கம் கூறினார்:—ஒன்பது தன்னுடைய மதிப்பை விட்டு இறங்காமலும் ஏறுமலும் இருக்கிறது கர்வப்படவில்லை. எப்படியென்றால்:—

$1 \times 9 = 9$

$2 \times 9 = 18$

$3 \times 9 = 27$

இரண்டால் ஒன்பதைப் பெருக்கினால் 18 வருகிறது. இதன் முதல் எண் = 1. இரண்டாம் எண் = 8. இரண்டையும் கூட்டினால் ஒன்பது வரும்.(1+8=9) அதேபோல் மூன்றால் ஒன்பதை பெருக்கினால் 27 வருகிறது. இதன் முதல் எண் = 2. இரண்டாம் எண் = 7. இரண்டையும் கூட்டினால் ஒன்பதுதான் வரும் (2+7=9).

[சுற்று முற்றும் எப்போதும் ஹிந்தி புழங்கும் தலை நகரில் — டில்லியில் வாழும் தமிழர்களின் தமிழ் ஆர்வம் பெரிது. அதிலும் இளஞ்சிறார்களின் தாய்மொழிப் பற்றுக்கு எல்லை கிடையாது. ஒரு உயர் அதிகாரியின் குமாரன்—சிறுவன் ஸ்ரீதர் எழுதியுள்ள ரசமான கட்டுரையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். 'விளையும்பயிர் முளையிலே தெரியும்' என்பது பழமொழி. சிறுவன் ஸ்ரீதரன் வருங்காலத்தில் சிறந்த எழுத்தாளனாக விளங்குவதற்கான ஆர்வமும், துடிப்பும் அவனது எழுத்தில் காணப்படுகின்றன. ஸ்ரீதரன் வளர்ந்தோங்க நமது வாழ்த்துகள்!

—ஆ.ர்.]

ஆனால் எட்டு சில சமயம் தன மதிப்பைவிட்டு இறங்குகிறது, சிலசமயம் ஏறுகிறது. எப்படியென்றால்:—

$1 \times 8 = 8.$

$2 \times 8 = 16.$

$7 \times 8 = 56.$

இரண்டால் எட்டை பெருக்கினால் 16 வருகிறது. இதன் முதல் எண் = 1. இரண்டாம் எண் = 6. இரண்டையும் கூட்டினால் ஏழு வரும். ஏழால் எட்டை பெருக்கினால் 56 வருகிறது இதன் முதல் எண் = 5. இரண்டாம் எண் = 6. இரண்டையும் கூட்டினால் 11 வரும். ஆகையால் முதலில் எட்டு தன் மதிப்பை விட்டுஇறங்குகிறது. பிறகு எட்டு, தன் மதிப்பை விட்டு ஏறுகிறது.

ஆசிரியரின் அறிவுத்திறனை எண்ணி மணியன் வியந்தான். மதிப்புக் குறைவதும், மண்டைக் கனம் ஏற்படுவதும் தவறு தானே?

"வரப்புயர" என்றுஔவை பிராட்டி தமிழ் மன்னன் ஒருவனை வாழ்த்தியது மணியனின் நினைவுக்கு வந்தது. தன் வாழ்க்கையில் என்றும் 'ஒன்பது போல வாழ்ந்து' முன்னேற்றம் அடைய அவன் உறுதி கொண்டான்.

இந்தியாவில் ரப்பர் தோட்டங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 37,300 ஆகும். அவற்றின் மொத்த விஸ்தீரணம் சுமார் 2½ லட்சம் ஏக்கரா.

குறைந்த விலையில் காந்திய நூல்கள்

—✻—

காந்திய இலக்கியங்களைப் புத்தக, வாசகசாலைக்குத் தர காந்தி நிதியில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கிராம, நகர புத்தக வாசக சாலைகளுக்கு முறையே ரூ. 200/-க்கு மேற்படாமல் 75%ம், ரூ. 2500-க்கு மேற்படாமல் 50%ம் மான்யம் அளிக்கப்படும். வாங்கிக் கொடுக்கும் புத்தகங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருக்கும்.

நிதி உதவி வேண்டுவோர் முழு விபரங்களுடன் விண்ணப்ப மனுவை நிதியின் காரியாலயத்தில் 5-7-58உக்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். விண்ணப்ப மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிவித்ததும் விண்ணப்பதார் அதற்கேற்ப தங்கள் பங்குத் தொகையை முன் பணமாக நிதிக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்ப மனுவு புத்தக ஜாபிதாவும் காரியாலயத்தில் கிடைக்கும். வேண்டுவோர் பன்னிரண்டு நயா பைசா தபால் வில்லைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் புத்தக ஜாபிதாவில் குறித்து அனுப்ப வேண்டும்.

கடிதங்களையும் பணத்தையும் அனுப்ப வேண்டிய விலாசம் வருமாறு :

நிர்வாகி, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, "ரவி" சொக்கிகுளம், தல்லாகுளம் தபால், மதுரை.

———

இரும்புக் கனி திட்டத்துக்கு அமெரிக்க நிதி உதவி

—✻—

பல காரிய அபிவிருத்தித் திட்டமொன்றிற்கா‌க, அமெரிக்க ஜனதிபதியின் ஆசிய பொருளாதார அபிவிருத்தி நிதியிலிருந்து இந்தியாவுக்கு 2 கோடி டாலர் (சுமார் ரூ 10 கோடி) ஒதுக்கித் தருவதற்கான ஒப்பந்தமொன்று புது டில்லியில் சமீபத்தில் கையெழுத்தாகியது. இந்தத் திட்டத்தின் கீழ், ரூர்கேலா பிரதேசத்தில் உள்ள இரும்புக் கனிச் சுரங்கங்கள் அபிவிருத்தி செய்யப்படும்; சம்பால்பூரிலிருந்து தித்லாகர் வரை புதிய ரயில் பாதையொன்று அமைக்கப்படும்; இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு இரும்புக் கனி ஏற்றுமதிகளைப் பெருக்கவகை செய்வதற்காக, விசாகப்பட்டணம் துறைமுகத்தில் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் இந்நிதி உதவி பயன்படும்.

✻

எழுதி அனுப்புங்கள்!

●

வர்த்தகம், பல வேறு தொழில்கள் பற்றிய கட்டுரைகளை "தொழில்" வரவேற்கிறது. வர்த்தக சபைகள், தொழில் சங்கங்களின் கூட்டங்கள், மகாநாடுகள், தீர்மானங்கள் பற்றிய செய்திகளையும் சுருக்கமாக எழுதி அனுப்பினால் வெளியிடுவோம். முடிந்த வரையில் தமிழிலேயே செய்திகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசியல், இலக்கியம், கலை பற்றிய கட்டுரைகளும், புகைப் படங்களும் வரவேற்கப் படுகின்றன. கவிதைகள், கதைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றையும் மகிழ்ச்சியுடன், "தொழில்" வெளியிடும்.

எழுதி அனுப்புங்கள்; பிரசுரிக்கிறோம்!

144851

இலக்கியம் :

மை தீட்டாக் கண்கள்!

—பி. வி. கிரி—

வளமார்ந்த வகைதன்னில் வனிதையவள் வாடும் வேளை மயக்கும் மாலை. காலையும் மாலையும் காதலன் வரும் நாளையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தாள். மானை நோக்குவாள், மயிலை நோக்குவாள். ஜோடியாக இணைந்து பேசும் வெண்புருவினைப் பார்ப்பாள். சலசல வென ஓடும் ஓடையும், கலகலவென ஆடும் பேடையும், துள்ளும் மீனும், நெஞ்சை அள்ளும் இயற்கைக் காட்சியும் காண்பாள். களிப்பாகத்தான் இருக்கும், தலைவன் இருந்தால்! ஆனால் அவள் உள்ளம் கவர் கள்வனைக்காணோமே?

வழிமேல் விழிவைத்து வழி பார்த்தாள். வரக்காணோம்! அவள் வந்தாள் தோழி.

'ஏடி, தோழி! இன்னும் அவரைக் காணோமே? பொருள் தேடப்போனவர் பிறர் பொறுமையைச் சோதிக்கலாமா?''

''ஏன் இப்படிக்கோபித்துக் கொள்கிறீர்கள்? பொருள் தேடப்போனவர், போனவுடன் விரைவில் வர முடியுமா என்ன? பணம் மரத்திலா காய்க்கிறது பறித்து வர? ஆமாம். கண்ணுக்கு ஏன் மை தீட்டவில்லை?''

''எங்காதலர் கண்ணிலேயே இருப்பதால், மை தீட்டினால் அவர் மறைவாரோ என்றெண்ணி மைதீட்டுவதில்லை!......''

தோழி சிரித்துக்கொண்டே, ''சரியானபதில்! ஆமாம். முன்பெல்லாம் சூடான உணவையே உண்பீர்கள். ஆனால் இப்போதோ ஆறிய உணவையே உண்கிறீர்களே, காரணம் என்ன?''

''என் நெஞ்சில் அவர் எப்போதும் இருக்கிறார்! சூடானவைகளை உண்பதால் அவர் மேனி வருந்துமே என்றெண்ணியதால்!......''

''குறும்புக்காரர் நீங்கள்! என்னிடம் பேசுவதுபோல அவரிடம் பேசக்காணோமே? என்ன? என்னையே முறைத்துப் பார்க்கிறீர்கள், கண்ணிமைகளைக் கூட இமைக்காமல்.........!''

''கண்ணிமைகளை இமைக்காததற்குக் காரணம் உண்டு தோழி! நான் கண்ணை இமைத்தால் காதலர் மறைவார் என்றே இமையாதிருக்கிறேன்!'

''ஏது,கேட்டதற்கெல்லாம் குறும்புப் பதிலே கிடைக்கிறது? யாரிடம் கற்றுக் கொண்டாய்! சரி, உங்கள் கையைக்காட்டுங்கள்! எனக்குச் சோதிடம் பார்க்கத் தெரியும்!''

அவள் கையைத் தோழியிடம் காட்டுகிறாள். கைகளை தோழி உற்றுநோக்குகிறாள். உடனே தலைவி,

''என்ன அப்படி பார்க்கிறாய்?...''

''ஒன்றுமில்லை கை விரல் ஒன்று தேய்ந்து விட்டதே என்றுதான் பார்த்தேன்!''

''நீ சோதிடம் பார்க்கும் லட்சணம் இதுதானா? கை விரல் தேய்ந்த காரணம் கூறவா? கேள்! அவர் பிரிந்த நாளையெல்லாம் சுவரில் குறியிட்டுத் தொட்டுத் தொட்டு எண்ணியதால் தான்! இப்பொழுது புரிந்ததா?''

உடனே தோழி,

''அதோ! அதோ!''

''என்ன? மானைத் தானே?......''

''இல்லை!''

''பின், மயிலையோ?''

''அதுவுமில்லை!''

''பின்னே என்னவாம்? குயிலைக்காட்டுகிறாயோ?...''

''குருடா நீங்கள்! காளையைக் காட்டினேன்!......''

''காளையா? எங்கே?''

''அதோ! கட்டான உடலுடன் உன்னைக் கட்டியணைக்கும் கட்டழகுக் காளை பார் என்றேன்!......''

அவள் நோக்கினாள், தன் உள்ளம் கவர் கள்வனை. அவனும் நோக்கினான், மயில் சாயல் மங்கையை. கண்கள் பேசின; தோழி பேசவில்லை! அவளுக்கு அங்கு வேலையுமில்லை! சென்றாளவள்.

இவ்வழகிய கருத்துக்கள் அமைந்த இச்சித்திரம் ''என்றும் புலராது யாணர் நாட் செல்கினும் நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மைய தாய்'' விளங்கும் திருக்குறளிலே வருவதாகும்!

ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

Doctors Agree is Good for You & Me.

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

Get a tin today.

ALVITONE LABORATORIES, MADRAS-16

★

சுவை மிக்கது ! **வலிமை தரக்கூடியது !** **சோர்வு நீக்கி சுகம் தருகிறது !**

ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு பானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை

சென்னை-16

ராசி பலன்

ஸி. வெங்கட்ராமன்

மேஷம்

(அசுவனி பரணி கார்த்திகை ¼)

இந்த ராசியாதிபர்களின் யோக பலாபலன்களை கவனிக்கும் நிலைமையில் ராசியாதிபன் பலமாக ஆட்சி பெற்றிருப்பதினுலும், சந்திரன் சஞ்சரிக்கும் ஆரம்பம் இரண்டு தினம், நல்லயோகாம்சமாக சந்துருஷ்டி, பணம் வரவு, சுகபோக இன்பம் சம்பவிக்கும். மேலும் குடும்பத்தில் சில சமயங்களில், வீண் விரோதம், இடம் மாறுதல், மனஸ்தாபங்களும், குருவின் பலத்தினல் அதற்கு நிவர்த்தியும், சந்துருஷ்டி, வெளி பிரயாணங்கள் உண்டு. மேலதிகாரிகளின், கருத்து மாறுபாடான தப்பான அபிப்பிராய பேத எண்ணங்கள் உண்டாகும். பொருமைமையும், அமைதியும் கையாளப் சாத்மிக எண்ணம், நிர்வகிக்கவேண்டும். ஆலய தெய்வ வழிபாடு செய்வதில், பகைமை, விரோதம், சாத்மீகம் உண்டாகும். நல்ல நாட்கள் 16, 17, 21, 22, 23, கெட்ட நாட்கள்: 25, 26, 27.

ரிஷபம்

(கார்த்திகை ¾ ரோகிணி மிருகசீரிஷம் ½)

ரிஷப ராசியாதிபர்களின் யோகபலன்களை சிந்திக்கும் ரீதியில் சூரியன் கடகத்தில் சஞ்சரிப்பதிலும், நல்லபலன் சுபமான சந்தோஷமான செய்தி, ஆள் அடிமைகள், சேவகவிர்த்தியும், சினேகிதர்கள் மூலம் உதவி, பணம் வரவு உண்டாகலாம். விவகாரங்கள் நன்மை லாபகரமாக அடைதல், செவ்வாய் ஆட்சியாக பலன் பெற்றிருப்பதினல் சிலவுகள் அதிகமாக கட்டுக்குமீறி கடன் வாங்கியும் செலவு செய்ய ஏற்படும். தாயாதிகள் சகோதரர்கள் மூலம் ஓர் அளவு சுபமங்களகரமான ஆதாயங்கள் லாபகரம் உண்டாகும். நவக்கிரக சாந்தி, ஆலயதெய்வ வழிபாடு பிரார்த்தனை செய்ய நன்மை உண்டாகும்; கூடுமானவரையில் கோபம் வராமல் பொருமையுடனிருப்பது உத்தமமாக உண்டாகும், பகைமை வருவதற்கும் தவிர்த்து கொள்ள சாதகமாக சூழ்நிலை ஏற்படும். நல்ல நாட்கள்: 17, 18, 19, 23, 24, கெட்ட நாட்கள்: 27, 28, 29.

மிதுனம்

(மிருகசீரிஷம் ½ திருவாதிரை புனர்பூசம் ¾)

இந்த ராசியாதிபர்களின் வாழ்க்கைத் தரம் மிக மிக சந்தோஷகரமான செய்திகளும், பணம் வருமானங்களும், நண்பர்கள் மூலம் அதிக மேம்பாடான ஆதரவும் அன்பும், மேலதிகாரிகளின் ஆதரவும், ஒற்றுமை, சௌஜன்யமாக லாபகரமான பலாபலன்கள் அடைவதற்கு எல்லா கிரகங்களின் போக்கு சாதகமான, வாழ்க்கைத் தரமான காலமாக தோற்றுவிக்கிறது. செவ்வாய் லாபஸ்தானத்தில் ஆட்சி பெற்றிருப்பதினுலும் மற்ற கிரக அமைப்பும் பொருந்திய நிலைமையையும், வீடு, கட்டடம், யாத்திரை, உல்லாசமாக வெளியூர் பிரயாணம், அன்னியர் பிரத்தியாரின் உதவி, பணசிலவு செய்தும் சந்தோஷமாக சஞ்சாரம் செய்யவும் வசதி உண்டாகும். சுப மங்களகரமான வழியில் குடும்ப ஒற்றுமை, நூதன ஆடை ஆபரணம் வாங்குதல் ஏற்படும். நல்ல நாட்கள்: 19, 20, 21, 25, 26, 27. கெட்ட நாட்கள்: 29, 30, 31.

கடகம்

(புனர்பூசம் ¼ பூசம் ஆயில்யம்)

இந்த ராசியாதிபர்களின் கிரகங்கள் யோகம் கவனிக்கும் நிலைமையில் யோகாதிபன் பஞ்சம ராசியாதிபன் செவ்வாய் மங்களகரன் ஆட்சி பெற்றிருப்பதினுலும், ஜீவன வழியில் சென்றதைவிட இந்திபாதி பின் பாகத்தில் வருமானம், புதிய முயற்சிகளில் ஈடுபடுதல், புதிய விவகாரங்களிலும் நண்பர்களின் சூழ் நிலைமையில் சவுகரியங்கள் அடைய சாதகமாக ஏற்படும். வேண்டிய சினேகிதர்கள், சகோதரர்கள், மேலதிகாரிகள் இவர்கள் கருத்து மாறுபாடான தப்பான எண்ணங்கள் திடும்பிரவேசமாக அடையவும், ஜன்ம சூரியன் சஞ்சரிப்பதில் பல தப்பான எண்ணம் உண்டாகும். சிற்சில சமயம் மனம் பீதியையும், கலவரமும் எண்பிக்கும். தைரியமும் பொருமையடையவும், சாந்தமாக பயன்படுத்தி கொண்டால்

நன்மை அடைவதற்கு சாதகமாகலாம். குருவும் சனியும் பலம் சரியில்லாதபடியால் நவக்கிரகம் சாந்தி வழிபடுதல், யாத்திரை செய்வது நன்மையுண்டாகும். நல்ல நாட்கள்: 21, 22, 23, 27, 28, 29. கெட்ட நாட்கள்: 24, 25, 26.

சிம்மம்

(மகம் பூரம் உத்திராடம் ¼)

இந்த ராசிக்காரர்களின் யோக அம்சம் யோசனை செய்யும் சமயம் எல்லாவிதமான கிரகங்களின் சஞ்சாரம் நிலைமை பார்த்தால் விரோதமான வழிகளில்தான் பலன்களை சொல்ல ஹேதுவாக நிலைமை இருக்கிறது. ஆரம்பத்தில் சந்திரன் பலன்மட்டும் பலமாக 2¼ நாள் சஞ்சரிப்பதில் ஓர் அளவு சவுகரியம், லாபம், சந்தோஷம் உண்டு என்று நினைக்க வழியுண்டு. ஆனாலும் திசாபுத்திகள் பலமாக இருந்தால் எந்த விதமான வகையிலும் பலன் குறையாமல் நடக்கும். கோச்சாரகிரகம் சரிஇல்லாத படியினல் கருத்துமாருபாடான விரோத மனப்பான்மை, வீண் வழக்குகள் மேல் அதிகாரிகளின் கோபத்திற்கும், வீண் அனுவசியமான பகைமை, குடும்ப அதிருப்தி இவைகளும், சிலவுகளும் அதிகமாகவும் உண்டாகும். பொருமையும் அமைதியையும் விடாப்பிடியாக பழக கற்பித்துக் கொள்ளவேண்டும். நல்ல நாட்கள்: 16, 17, 24, 25, 28, 29. கெட்ட நாட்கள்: 26, 27.

கன்னி

(உத்திரம் ¾ அஸ்தம் சித்திரை ½)

இந்த ராசியாதிபர்களின் நிலவரம்சாதகமான கிரக அமைப்புகள் இருந்த போதிலும் செவ்வாய் கிரக நிலவரம் அடிக்கடி மனம் அமைதியாக இருக்க சரிவராது. குடும்பத்தில்ஒற்றுமையாக வாழ்க்கைதரம் நடத்த சற்று கருத்து மாறுபாடான எண்ணங்கள், மனம் சந்தேகத்திற்கு சாதகமான எண்ணங்கள் சூழ் நிலை ஏற்படும். சூரியன் பலமாக லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதனல் பெரியோர்கள் மூலம் ஆதரவு, லாபம், வருமானம் கிடைக்க சந்தர்ப்பம் வரும். பிரயாணம் உண்டாகலாம். மேலதிகாரிகள் இவர்கள் மூலம் ஒற்றுமை, இடம் மாறுதல், அபிமானம் இதனல் லாபகரமாக பலன் அடையவாய்ப்பு சமயம் சந்தர்ப்பம் உண்டு. நல்ல நாட்கள்: 17, 18 25, 26, 27, கெட்ட நாட்கள்: 20, 21, 24.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾)

இந்த ராசிக்காரர்களின் அம்சங்கள் சூரியன், புதன், சுக்ரன் சஞ்சாரம் சற்று சாதகமான அமைப்புகள் உண்டாகும். மேலிடத்தவர்கள் அன்யோன்ய விசுவாசம், அன்பும் ஆதரவும் அடைய சூழ் நிலை அமைந்திருக்கிறது. செவ்வாய் பகவான் 7-ம் வீட்டிலிருப்பதின் பலன் எண்ணும்போது வீட்டில் குடும்பத்தில் சற்று மனக்கஷ்டம், கோள் கலகம் வீண் மறைமுகமான கருத்து, மாறுபாடான தப்பான எண்ணங்கள் அடிக்கடி தோன்றி அமையும், திசாபுத்திகள் பலமாக நடக்கும் ராசிக்காரர்கட்கு சந்துருஷ்டி உல்லாசமாகவே காலப் போக்கு நடக்க ஏதுவாகும். வீடு, கட்டடம் இடம் மாறுதல் உண்டாகும். வீண் கோர்ட்டு கிரிமினல் வழக்கு இவைகளில் ஈடுபட்டு, அதனல் துன்பங்களையும் சங்கடமும் உண்டாகும். உத்யோகம் ஜீவனம் செய்யும் ராசியாதிபர்கட்கு மேல் அதிகாரிகள் கருத்துகள் ஒற்றுமையாக இராமல் தப்பான எண்ணங்கள் உண்டாகும். அதனல் வேலை நிருத்தம், லீவுபோடுதல் இவைகள் எண்பிக்கும். கூடுமானவரை அமைதியையும் பொருமை இருக்கவேண்டும். ஆலய வழிபாடு செய்தல், தீபம் போடுதல் நன்மை உண்டாகும். நல்ல நாட்கள்: 17, 18, 19, 20. கெட்ட நாட்கள்: 21, 22.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசிக்காரர்களின் நிலவரம் பார்க்கும் நிலைமையில் ராசியாதிபன் அங்காரகன் ஆட்சி பெற்றிருப்பதினல் சற்று சகலவித வழிகளிலும் லக்ஷிமிகரம், குடும்ப ஒற்றுமை பணம் வருமானம், வெளியூர் உல்லாச பிரயாணம், புதிய ஆடைகள். ஆபரணம் வாங்குவதற்கு சாதகமான காலமாகும்.பெரியோர்கள் நண்பர்கள் ஆதரவும் அவர்களின் உபகாரங்கள் உண்டாகும். மேலும் கூடுமானவரையில் வாழ்க்கை சௌஜன்யமாகவே நடக்க சாதகமாக இருக்கும். சனி பகவானின் போக்கு சில சமயங்களில் குடும்பத்தில் ஒற்றுமைக்கு பாதகமாக ஏற்படும், வருவாய்க்குமேல் சிலவு

செய்யவும் சரிபோவதே கஷ்டமாகும். கூடுமானவரையில் ராசியாதிபர்கள் நவக்கிரக சாந்தி தீபம் போடல், ஆலய வழிபடுதல் இவைகளினல் கொஞ்சம் நன்மை சாத்மீக சவுகரியங்கள் உண்டாகும். பொருமை அமைதிகளை கடைபிடிப்பது உத்தமம். நல்ல நாட்கள்: 21, 22, 23. கெட்ட நாட்கள்: 24, 25.

தனுசு

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசிக்காரர்களின் அம்சம் கூடியவரை இதுகாரும் இருந்த கஷ்ட நஷ்டங்கள் பகைமை இவைகள் சற்று குறைந்து சவுகரியமான சந்துருஷ்டியான சமயங்கட்கு வாழ்க்கைத்தரம் நடத்திக்கொள்வதற்கு இனி சாதகமாக தோற்றுவிக்கும்: சனி பகவான் சஞ்சாரம் அடிக்கடி மனம் திருப்தியோடு வாழ்க்கைத்தரம் செய்ய சற்று கஷ்டமும் கூடவே கலந்து அனுபவிக்க ஏதுவாகும். திசாபுத்திகள் பலமாக இருப்பின் எல்லா வழியிலும் சற்று சகலவிதங்களாலும் ஒங்கியே நடைபெறும். வெளியூர் பிரயாணம், யாத்திரை இவைகள் உண்டாகும். வாகனம் வீடு, கட்டடம் கூட்டவும் வாங்கவும் சாதகமாக உண்டாகும். நவகிரக சாந்தி தீபம் போடுதல் இவைகளினல் சந்துருஷ்டி மகிழ்சியை அடைய சாதகமாகும். நல்ல நாட்கள்: 12, 22, 23, 24 கெட்ட நாட்கள்: 25, 26, 27.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம் 1 அவிட்டம் ½)

இந்த ராசியாதிபர்களின் நிலவரம் கவனிக்கும் நிலைமையில் ராசியாதிபன் பலமாக இருக்கின்றபடியினுலும் கூடியவரையிலும் ஓர் அளவு சவுகரியம், பெரியோர், சினேகிதம் நண்பர்கள் மூலம் ஆதரவு பிரதிபலன்கள் சன்மானம் கிடைக்கும். தவிரவும் மேலதிகாரிகள் விஸ்வாசம் அபிமானம் அவர்கள் மூலம் சாதகமான நன்மைகள் எதிர்பார்க்கலாம். (செவ்வாய்) நிலமகன் சஞ்சாரம் செய்வதில் தான் ஆட்சிவைத்திருப்பதில் குடும்பக் கஷ்டம், கருத்துவேறுபாடான எண்ணங்கள் தபபான அபிப்பிர்ாயம் எண்பிக்க நேரும். கூடியவரையில் பொருமை அமைதியை கையாண்டு பழகி வருவ்தில் நன்மை சித்திக்கும். நல்ல நாட்கள்: 16, 17, 26, 27, கெட்ட நாட்கள்: 19, 20.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் 1 பூரட்டாதி ¾)

இந்த ராசியதிபர்களின் நிலவரம் கவனிக்கும் நிலைமையில் சகலமான எல்லா கிரக நிலை சாதகமான நிலைமையில் விளங்கிடநிற்கிறது. செவ்வாய் சூரியன் ராசியாதிபன் இவர்கள் பலமாகவும் நின்றதினல் குடும்ப ஒற்றுமை, சந்தோஷம், நண்பர்கள், உறவினர்கள் மூலம் சாதகமான வருமானம், மேலதிகாரிகள் விஸ்வாசம், அவர்கள் மூலம் ஆதரவு, கீர்த்தி புகழ் பட்டம் பதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மங்களகரமான சுப சிலவுகள் செய்யவரும். குடும்பதில் ஆத்மாத்தமான வழியில் நன்மை, வீட்டு விவகாரம், கட்டடம், இவைகள் கட்டவும் வாங்கவும் நேரிடும். வேறு புதிய நண்பர்கள் உதவியினல் லாபகரம் ஏற்படும். உத்யோகம் ஜீவனம் தொழில் செய்யும் ராசியாதிபர்கட்கு ஜீவனம் உயர்வு, அதிக சம்பளம் சன்மானம் இவைகள் பெருவதற்கு சாதகமாக கிரகநிலை அமைந்திருக்கிறது. மகிழ்ச்சிக்கு தகுதியாக நிலை அமைந்திருக்கிறது. நல்ல நாட்கள்: 16, 17, 18, கெட்ட நாட்கள்: 21, 22.

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசியாதிபர்களை, கவனிக்கும் நிலைமையில் கஷ்டமும் சந்தோஷமும்கலந்தே அனுபவிக்க வரும். கிரகநிலை பார்க்கும் நிலைமையில் சரியான வழியில் சவுகரியமான பலன்களை அனுபவிக்க கொஞ்சநாள் பொருத்திருக்க வேண்டும். ஜன்மத்திலிருந்து விலகிய அங்காரகர் தன் சொந்த மேஷத்திற்கு ஆட்சி பெற்ற ஸ்தானம் போனதில் கொஞ்சம் கஷ்டம், விலகி போகலாம். கூடிய வரையில் மனம் சாத்மிகமாக இருக்க சரிபோகாது. நவக்கிரக தேவதா பூஜை, தீபம் போடுதல், ஆலய வழிபாடு, தெய்வீக வழியில் பிரயாணம செய்வதினல் கொஞ்சம் மனசாந்தி உண்டாகும். மனம் அமைதிக்கு பொருமையை கையாள்வதினல் சவுகரியம் உண்டாகும். நல்ல நாட்கள் : 19, 20, 21. கெட்ட நாட்கள்: 22, 23, 24.

சர்வ ஜனோ சுகினோபவந்து
சுபமஸ்து.

விமர்சனம் :

பாட்டாளியின் சபதம்

கிராமங்கள் தாம் இந்தியத் துணைக்கண்டத்தின் முதுகெலும்பு என்பது மகாத்மாவின் பொன்மொழி! கிராம மக்களின் அன்றாடவாழ்வின் அடிப்படை நிகழ்ச்சிகளைக் கொண்டு எத்தனையோ படங்கள் வெளி வந்து விட்டன! அவற்றில் மறக்கமுடியாத சம்பவங்களையும் கருத்துக்களையும் மக்கள் மனத்தில் ஊன்றி விட்ட எழில் ஓவியம் "பாட்டாளியின் சபதம்."

நாகரிக உலகில் மனிதன் கண்டுபிடித்த எத்தனையோ வகை யந்திரங்கள் மனித வாழ்வுக்குத் தானே பயன்படவேண்டும்? அவை மனித வாழ்வுக்கே உலை வைக்குமானால்?......இந்தக் கேள்விக்கு விடை காண ஒரு திரைப்படம் தயாரித்த பெருமை ஸ்ரீ பி. ஆர். சோப்ராவையே சாரும்!

யந்திரத்துக்கும் ஏழை மக்களின் வயிற்றுக்கும் போராட்டம்! அத்துடன் காதலுக்கும் லட்சியத்துக்கும் போராட்டம்! இடையிலே உயிர்நட்பின் பிரிவு! இவை கதையின் மூலப் பொருள். அலுப்புத்தட்டாமல் சுவையுடன் படத்தை எடுத்திருக்கிறார் ஸ்ரீ சோப்ரா.

யந்திரத்தோடு போட்டி போடும் இதயத்தவனாய் நடிக்கிறார் திலீப்குமார். வினாடிக்கு ஒருமுறை அவர் முக பாவங்களை மாற்றி, போற்றும்படி நடித்திருக்கிறார். திலீப்பின் இதயங் கவர்ந்தவளாக வருகிறார் வைஜயந்திமாலா! ராணியாக ஏற்று நடித்துள்ள அவருடைய நடிப்பு குறை சொல்ல முடியாத நடிப்பு. கிருஷ்ணனாக அஜீத் நடிக்கிறார். டெய்ஸி இரானிக்கு வாய்ப்புக் குறைவே. ஜானி வாக்கர் உடம்பை வளைத்து நெளித்து சிரிப்பு மூட்ட முயற்சிக்கிறார். சாந்த்உஸ்மானி, கும்கும் முதலியோர் நடிப்பில் குறை இல்லை.

ஹிந்தியில் இருந்து தமிழாக்கப்பட்ட இப்படத்திற்கு கலைஞர் எஸ். டி. சுந்தரம் வசனம் எழுதி இருக்கிறார். டப்பிங் படத்திற்கு வசனம் எழுதுவதே கடினம் தான். தமிழ்ப்பதிப்பின் வெற்றிக்குக் கருத்துள்ள சிறந்த வசனம் தான் முக்கியகாரணம் என்றால் அது நூற்றுக்கு நூறு உண்மை. படம், "டப்" செய்ததுபோன்றே தெரியாமல் இருப்பது படத்தின் வெற்றிக்கு அடிப்படை. ஹிந்திப்படத்துக்கு தமிழ் பேச்சுக்களைச் சிறந்த முறையில் ஒட்ட வைத்திருக்கிறார்கள். இது வசனகர்த்தாவின் வெற்றி. சங்கீத மன்னர் O. P. நய்யார் இசை அமைப்பு; செவிக்கு நல் விருந்து. "வாழ்வில் உன் கோரிக்கைபோலே", "வாராய் நீயே வா......", போன்ற பாடல்களைக் கேட்கும்போது காதில் தேன் பாய்கிறது. தமிழ்ப்பாடல்கள் கம்பதாஸனின் சிருஷ்டி. மல்ஹோத்ராவின் படப்பிடிப்பு கண்ணுக்கு இனிமை; பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

சிறந்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு படம் எடுத்து வெற்றி பெறுவது கடினமே. இதில் வெற்றி கண்ட ஸ்ரீ சோப்ராவை பாராட்டாமல் இருக்க முடியாது.

—சோ. க.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press 30, Edapalayam Street, Madras-3.